
“அறிவைத் தந்திடத் துடிக்கும் தமிழ்த் திங்கள் ஏடு”

# நம்மட முற்றம்

தை 2023 | இல்லம் 03 | முற்றம் 04 | உருபா – 150.00



* தாக்குதல் இடி முழக்கம்
* எதிர்மறை
* திறப்பு
* வன்னி நிலப்பரப்பில்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAWAMILAS

# NAWAMILA'S

*Dealers in Textiles*




**#205 N.C. Road,**
**Trincomalee.**

**026-2222551**
**026-2223209**

Nawamilas trincomalee

nawamilas205@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை ஆசிரியர்

திரு.கதிர்.திருச்செல்வம்

இதழ் ஆசிரியசர் குழு

திரு. அ.ரவீந்திரன்
திரு. நா.காளிராசா
திரு. வ.மகேஸ்வரன்
திரு. வை.கமலநாதன்
திரு. தா.சிவானந்தம்
திரு. கி. அருள்செல்வன்
திருமதி. சுஜந்தினி யுவராஜா
ஜனாப். ஹ.மு.மு.மன்சூர்
ஜனாபா. மர்ளியா சக்காப்

தொடர்புகளுக்கு

"நம்மட முற்றம்"
48/116, விநாயகபுரம்,
கண்டித் தெரு,
திருக்கோணமலை.

தொலைபேசி : 0772908990

மின்னஞ்சல் :-
nammadamuttam20@gmail.com

# உள்ளிருப்பவை

சிறுகதைகள் — பக்கம்


- தோணி — 25
- திறப்பு — 30
- நிலாவுக்கொரு வீட்டு முற்றம் — 57


கவிதைகள்


- எதிர்மறை — 07
- மீளும் பேரொளி — 08
- உழவனின்றேல் உலகில்லை — 09
- திருவிழா — 13
- பாட்டி செய்த கத்தரிக்காய்ப் பொரியல் — 14
- தாழமுக்கம் — 21
- இரவு-கனவு-சூரியன் மற்றும் பனியும் மழையும் — 23
- வினை விதை — 24
- அடையாள அட்டை — 29
- குடையும் கொடையும் — 36
- மகாநாமர் வேதவசனம் எழுதி.... — 37
- வறுமையிலும் செம்மை காண்க — 54
- பாரதி தீ — 55
- விழித்தெழு மகனே — 56


கட்டுரைகள்


- கல்லடி நாட்கள் — 01
- தாக்குதல் இடிமுழக்கம் — 10
- பிரித்தாளும் அரசியலும் தமிழின சுதந்திரமும் — 15
- நம்மட படைப்பாளி - கனகசூரியம் யோகானந்தன் — 38
- அடையாளமற்றிருத்தல் — 40
- வன்னியநிலப்பரப்பில் மீண்டும் ஒரு கல்வெட்டு — 47




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றவர்களை மதித்தல்

இலத்திரனியல் வேகமாக வளர்ந்துவந்த உலகில் மனிதர்களின் அடிப்படைப் பண்பான மனிதர்களை மதித்தலானது வளர்ந்துவரும் நாடுகளிலே வேகமாகக் குறைந்து வருவதனை அந்நாடுகளில் வாழுகின்ற மனிதர்களின் நடத்தைகள் மூலமாகவும் அந்நாட்டின் பொருண்மிய மேம்பாடுகள் மூலமாகவும் அறியக்கூடியதாக உள்ளது. நமதுநாடும் இந்தவகையான போக்கையே கொண்டுள்ளது. மற்றவர்களை மதித்தலென்பது ஒருவர் மற்றவர்களின் கருத்துகளுக்கு காது கொடுத்துக் கேட்கின்ற தன்மையிலும் நேரத்தை மதிக்கின்ற தன்மையிலும் முதன்மை யாகத் தங்கியுள்ளதெனலாம். அந்தவகையில் வகையில் நமதுநாடும் மற்றவர்களை மதிக் கும் போக்குக் குறைந்த நாடாகவே தொடர்ந்திருந்து வருகின்றது. அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு அண்மையில் தென்கொரிய நாட்டினுடைய அதிகாரி திரு. சீ சங் லீ அவர்களது இலங்கை வருகையும் அவரது கருத்துகளும். அவரது கருத்துகள் நமது நாட்டிலுள்ள அனைத்து குடிமக்களுக்கும் பொருந்தும் கருத்தாகவே பொதுவாக உள்ளதனை ஏற்றுக்கொண்டேயாக வேண்டியுள்ளது. தென்கொரிய பேரிடர் நிவாரண நிதியத்தின் ( South Korea Disaster Relief Fund) தலைவர் திரு. சோ சங் லீ அவர்களுடன் இலங்கையின் பொருண்மிய நெருக்கடிக் குத் தீர்வு காண்பதற்காக ஏற்பாடாகியிருந்த கலந்துரையாடலுக்கு நமது நாட்டின் இராஜாங்க அமைச்சர் அனுபா பஸ்குவல் அவர்களும் அவரது குழுவினரும் அரை மணி நேரம் தாமதமாகச் சென்றுள்ளனர். இது தென் கொரிய அதிகாரியைக் கோபமடையச் செய்துள்ளது. இராஜாங்க அமைச்சரின் முன்னிலையிலேயே தன் கருத்துகளைத் துணிவுடன் கூறியிருக்கிறார்.

(முழுமையான விபரங்கள் 22 டிசம்பர் 2022 நாளேடுகளில்)

"தென்கொரியாவில் இது இடம்பெற்றிருந்தால் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பார்கள். ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருப்பார்கள்." "பொய்களைச் சொல்வதும் பொய்யான வாக்குறுதிகளை அளிப்பதும் இலங்கையில் சாதரணமாகிவிட்டது. அது சிறிலங்காவின் பண்பாடாகிவிட்டது" "இவ்வாறான அமைச்சர்களைச் சந்திப்பதில் எந்தப் பயனுமில்லை" இவ்வாறான வார்த்தைகள் மூலம் நம்மைச் சாடியுள்ளார் அந்த அதிகாரி. அவர் சொல்லியதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தோன்றவில்லை. நேரத்திற்கு நாம் வழங்கும் முன்னுரிமையானது நம்மை மேம்பாடடையச் சொல்லித்தரும் நிறுவனங்களும் அவ்வாறு-தான் நடந்து கொள்கின்றன. 'உனக்கில்லையடி உபதேசம் ஊருக்கடி' என்பது போலவே நம் நாட்டில் கூடுதலானோர் நடந்துகொள்கின்றனர். இனிவருங்காலத்திலாவது தென்கொரிய அதிகாரியின் கருத்தினையாவது படிப்பினையாகக் கொண்டு செயற்படுதல் நமது நாட்டின் மேம்பாட்டிற்கு வழிசமைக்கும்.

*-முதன்மை ஆசிரியர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**முற்குறிப்பு**

கல்லடி நாட்கள் என்ற தலைப்பிட்டு நான் பகிரப்போகும் எனது சொந்த பட்டறிவுகள் இந்திய எழுத்தாளர் ஆர்.கே.நாராயணன் அவர்களின் மால்குடி நாட்கள்போல சுவாரிசியத்துக்குரியதன்று. தீவிர வாசகர்கள் இந்த முற்கு-றிப்புடன் கடந்து செல்லலாம். இதனைப் படிப்பதால் ஏதாவது கிடைக்கும் என எண்ணுவோர் தொடர்க.

**நிலப்பகுதி**

மட்டக்களப்பு நகரின் நுழைவாயில் பரப்பாக அமையும் கிழக்குப் பல்கலை மருத்துவபீடத்திற்கு முன்பாக உள்ள சுற்று வளைவு (**rounder board**) தொடங்கி கல்லடிப்பாலம் உட்பட மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரி(டெக்னிக்கல் கொலேஜ்) வரைக்கும்.

**குறிப்பு :** இந்த உள்பார்வைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உரியதன்று.

**அறிமுகம்**

கல்லடி என்றதுமே நினைவுக்கு வருவது கம்பீரமான கறுப்பழகியாய் நிமிர்ந்து நிற்கும் கல்லடிப் பாலமே. இப்போது புதிதாக ஒரு பாலம் வந்தாலும் அந்தப்பழமையான பாலத்தின் கம்பீரம் “அவள் ஒரு தொடர்கதைதான்”. இனப்போரின் ஆரம்ப நாட்களிலேயே இந்தப்பாலத்தின் இருபுறமும் சோதனைச் சாவடிகள் வந்து குந்திற்று. சிறிய வயதுகளில் இந்தப்பாலத்தின் மீது பயணம் போகையில் பாலம் இடிந்து வீழ்ந்துவிடும் என்ற நம்பிக்கை என்னுள் நிலைபெற்றிருந்தது. எனவே மட்டக்களப்புக்குப் போகும் பயணங்களைக் கவனமாகத் தவிர்த்து விடுவேன். அப்படியிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிடையே தலைகாட்டும் பல்லுக்கொதிக்கு மட்டக்களப்பு மரு-த்துவமனைக்குப் போகும் தருணங்களில் பாலம் தாண்டும்மட்டும் ஒரே அழுகைதான்.

**தொடர்ச்சி**

கல்லடிக்கும் எனக்குமான நிரந்தரஉறவு ஆரம்பிக்கிறது உயர்தர பரீட்சைக்கு இரண்டாம்தரம் தோற்றிய ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று எட்டுகளில். நகரில் வகுப்புக்கு போவதற்காக தங்கியிருந்து படித்த வீட்டை(போடிங் ஹவுசை) கல்லடியிலேயே தேர்வு செய்திருந்தேன். ஏனெனில் மட்டக்களப்பின் பரபரப்பு கல்லடியில் இல்லை. இத்தனைக்கும் கல்லடி ஒரு அரைநகர் (செமி ரவுண்)தான். ஆனால் கல்லடியின் பரபரப்பு இரசனைக்குரியது. நான் இருந்தவீடு மட்டக்களப்பு வாவியின் ஓரமாகவே இருந்தது. கொழுத்தும் கோடைநாட்களில் மரங்கள் சூழ்ந்த அந்த வீட்டின் வேலியோரமாக கதிரையை போட்டுத்தான் படிப்பேன். அது ஓர் அற்புத அனுபவம். சலசலத்து ஓடும் வாவி. தென்றலாய் வீசும் காற்று. தூரத்தே தெரியும் மட்டக்களப்புக் கோட்டை. நல்லவேளை நான் அப்போது எழுத்துப் பணியில் இல்லை. மட்டக்களப்பில் ஒரு பௌதிகவியல் ஆசிரியர் (பிசிக்ஸ் சேர்) இருந்தார். அவரின் பெயர் ஜெயானந்தசாமி. அவரின் வகுப்பு விடிகாலையில் ஆறுமணிக்கு நடக்கும். காலை ஐந்தரைக்கே புறப்பட்டு விடுவேன். ஒரு கரணியம் முன்னுக்கு இடம்பிடிக்க. அடுத்தது இளங்காலையில் கல்லடிப்பாலம் தாண்டி மிதிவண்டியோடுதல் அலாதிப் பட்டறிவு .உண்மையிலேயே அதிகாலை வகுப்பில் பௌதிகவியல் (பிசிக்ஸ்) படிப்பது கல்லில் எழுத்து பதிவதுபோல அல்லது பசுமரத்தாணிபோல. ஆ..சொல்ல மறந்து விட்டேன். பருவமாற்றங்களில் நானும் கல்லடிப்பாலமும் நெருங்கிவிட்டோம் இரு சினேகிதர்களாய். இளங்காலையில் பாலத்தையும் அதன்சூழலையும் இரசித்தல் அற்புதங்களின் உச்சம்.

**கல்லடி நூலகம்**

பகல்நேர படிப்புக்காக மட்டக்களப்பநூலகம் போதல் வழமை. நிறைய புத்தகங்களைக் கொண்டிருந்த அறிவுச் சோலை அது. ஆனால் அங்கு நடக்கும் "விழிகளால் எறிதல்களால்" கவனம் சிதறிவிடும். இதனால் பேச் சியம்மன் கோயிலுக்கு முன்பாக இருக்கும் கல்லடி நூலகத்தை நாடுவேன். பெரிய நூலகம் போல் அதிகநூல்கள் இல்லையாயினும் நிம்மதியாகப் படிக்கலாம். இறுதிப்பரீட்சைக்கு முந்தைய நாட்களில் காலை ஒன்பது தொடக்கம் மாலை ஆறுவரைக்கும் காலம் அங்கேயே கழிந்தது. நான் இருந்த வீட்டில் ஓர் ஐயா இருந்தார். அவரை நாங்கள் “அக்கப்பா”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே அழைப்போம். அவர் கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு முன்பு இருக்கும் பிள்ளையார் கோவிலில் தொண்டராக இருந்தார். இதனால்

**கோவில்களும் பிரசாதமும்**

தினமும் எங்களுக்குப் பொங்கல், மோதகம், வடை என்பன நித்தமும் கிடைக்கும். இதனைத்தவிர அக்கப்பாவின் புண்ணியத்தில் நாங்கள் (பே-ாடிங் பெடிகள்) கோவிலுக்கு போனால் சிறப்புக் கவனிப்புண்டு. கல்லடி பேச்சியம்மன்திருவிழா ஆடியில் நடைபெறும். ஆலயத்தின் இறுதிநாள் நி-கழ்வு ஒரு மாலையிலேயே நிகழும். அன்றைய நாளில் சிறப்பாகத் தயார் செய்யப்பட்ட கூழினை பிரசாதமாக தருவர். தாமரை இலையில் கூழ் அருந்துவதும் அதன் தனித்தன்மை நிறைந்த சுவையும் அப்பா.... அப்ப-ப்பா. தாதியர் பயிற்சியில்(நேர்சிங் ரெயினிங்) இருந்த மூன்று ஆண்டுக-ளிலும் கூழ் குடிக்கத் தவறாது போயிருக்கேன்.

**ஆட்டு சூப்**

மாட்டு சூப்புகளும் கோழி சூப்புக்களும் நிறைந்து கிடந்த நகரத்து கடை-களுக்கு தொலைவாக கல்லடி வேலூரில் ஒரு ஆட்டு சூப் கடையும் இருந்தது. வார இறுதிகளில் நானும் நண்பன் கேதாரமுமாய் வகுப்புக்கள் இல்லாத அந்திகளில் "கேப்புக்குள் புகுந்து கடா வெட்டுவோம்". அந்த நாட்களின் பின்னர் ஆட்டு சூப்பின் அற்புதமான சுவை கிட்டவில்லை.

**நடா ஆசிரியையின் பௌதிகவியல் (ரீச்சரின் பிசிக்ஸ்) வகுப்பு**

உயர்தர கணித ,விஞ்ஞான பிரிவுகளின் வகுப்புகள் பெரும்பாலும் நகரினை மையப்படுத்தியே இருந்தன. மாறுபாடாக கல்லடியில் நடா ஆசிரியையின் பௌதிகவியல்(ரீச்சரின் பிசிக்ஸ்) வகுப்பு இருந்தது. ஆண் ஆசிரியர்களால் நிரம்பியிருந்த உயர்தர மேலதிகவகுப்பு(டியூசன்) நடாத்துனர்களில் ஈச்சா ஆசிரியை, நடா ஆசிரியை ஆகியோர் துருவ நட்சத்திரங்களே. அந்த நாட்களில் பௌதிகவியல் வினாக்களை உள்ளடக்கிய அடங்கன் பயி-ற்சிகள் என்ற நூல் ஒன்றிருந்தது. நடா ஆசிரியையின் கற்பித்தலே இந்த அடங்கன் பயிற்சிகளை அடிப்படையிலானதுதான். சும்மா சொல்லக்கூடாது மனிசி படிப்பித்தால் வீட்டில் படிக்க தேவையில்லை. அப்படியிருக்கும். ஆனால் எனது துரதி'டம் அவரிடம் ஒரு குறுகிய காலமே கற்க கிடை-த்தது. பிற்காலத்தில் மதி அண்ணாவும் கல்லடியில் பௌதிகம் மற்றும் தூய, பிரயோக கணித பாடங்களை கற்பிப்பதில் பிரபலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவானந்த வளாகம்**

கல்லடி என்றதும் உடனடி நினைவில் எழுவது பாலமேயாயினும் அதற்கு அடுத்து நினைவுக்கு வருவது கல்லடி சிவானந்தா கல்லூரியே. சைவசமய ஆசாரத்தை அடிப்படையாக கொண்டதும் விபுலானந்தஅடிகள் போன்ற மகான்களின் அருளாசி பெற்றதுமான இந்தப்பாடசாலையின் பெயர் கிழக்கு மாகாணமெங்கும் பிரபல்யமானது. அகில இலங்கையெங்கும் இந்தப்பாடசாலையின் மாணவர்களுக்கு தனிமரியாதை உண்டு. இதை நான் ஏன் வளாகம் என குறிப்பிட்டேனென்றால் சிவானந்தாப்பாடசாலை, விபுலானந்தா இசைநடனக் கல்லூரி, இராமகிருஷ்ணமிஷன் மற்றும் சாரதா ஆச்சிரமம் என்பன ஒன்றரை கிலோமீட்டர் நீளத்திற்கு அடுத்தடுத்து அமைந்த இடங்கள் மாத்திரமன்றி அவற்றினிடையே தொடர்புகளும் உண்டு. இப்போது இசைநடனக் கல்லூரி கிழக்கு பல்கலையின் கீழ் சென்றுவிட்டது. ஆன்மிக பித்தேறிக் கிடந்த காலங்களில் பகவத்கீதை வாங்கவும் சாதுக்களைக் காணவும் சிலதடவைகள் இந்த வளாகத்திற்கு சென்றிருக்கிறேன். சிவானந்தாக்கல்லூரியில் படிக்கவேண்டும் என்ற எனதுகனவும் கானல்நீராயே போனது.

**நாவலடி நினைவுகள்**

கல்லடி வாவிக்கும் இந்து சமுத்திரத்திற்கும் இடையிலான குறுகிய நிலப்பரப்பே நாவலடி கிராமமாகும். முகத்துவாரம் வரைக்கும் நீண்டிருக்கும் இந்த வீதியில் தாதியர் பயிற்சிக்(நேர்சிங் ரெயினிங்) காலத்தின் வாரஇறுதிகளை இந்த ஊர்ப்பக்கமாக நானும் நண்பர்களுமாய் கழித்திருக்கி றோம். இயற்கை அழகிற்கு பஞ்சமில்லாத கிராமம் இது. எங்களுடைய சமூகவியல் தாதியர் களச்செல்லுகை(உழஅஅரவைல ரெசளைபெ கநைடன வசனி) இல் ஒருநாள் மதியத்தில் நாங்களும் எங்கள் பொறுப்பாசிரியர் திருமதி. வீரசிங்கம் அம்மணி(மேடம்) அவர்களுமாய் இங்கிருக்கும் தென்னந்தோப்பில் மதிய உணவினை அருந்திய பின் கலந்துரையாடலில் ஈடுபட்ட அந்த ஒருநாள் "சூரியனின் பொற்கால புதன்" போல அத்தனை சுவாரிசியம். இந்த அற்புதக்கிராமம் சுனாமியால் சிதைந்த நினைவுகள் கொடூரமானவை. இப்போது மீண்டும் பழைய நாவலடியாய்.

**கல்லடிக் கடற்கரை (பீச்)**

கடற்கரை என்றாலே பொழுதுபோக்குமிடம் என்பதை சொல்லி தந்ததே இந்த "மெரினாதான்". ஞாயிறு பின்னேரங்கள் அதிகமாகக் கழிவது இங்குதான். நண்பர்களிடையே ஏற்படும் பஞ்சாயத்துகட்கான தீர்வுகளை இங்குதான் எட்டுவோம் வடைகளுடன் அல்லது மரவெள்ளி பொரிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(டேஸ்ட்களுடன்.) எத்தனையோ மனக்குமுறல்களை இறக்கி வைத்திருக்கிறோம் இந்த மணல்வெளியில்.

**சாந்தி திரைப்படமாளிகை (தியேட்டர்)**

உயர்தரக் காலங்களில் இந்த இடத்துக்குப் போவது கிட்டத்தட்ட கள்ளுக்கடைக்குப் போனது மாதிரித்தான். அப்படியோர் குற்றவுணர்வு ஏற்படும். அதனால் கவனமாக தவிர்த்த இடம். ஆனால் தாதியர் பயிற்சிக காலத்தில் (நேர்சிங் ரெயினிங் பீரியட்டில்) சரளமாக புழங்கியிருக்கிறேன் நண்பர்களுடன். சிட்டிசன் படம் பார்த்தபிறகு கல்லடியில் நண்பன் சசியின் வீட்டில் சாப்பிட்ட விருந்து அறுசுவை தான்.

இப்போதைய புதிய கல்முனை வீதிக்கு சமாந்தரமாய் பழைய கல்முனை வீதியில் கல்லடி முதல் காத்தான்குடி வரைக்கும் சும்மா இருந்த காலங்களில் அடித்த சுற்றுப்பயணங்களின் நினைவுகள் இனி மீளுமா?

"கல்லடி-என் இருபதுகளின் அழிக்க முடியாத குறியீடு"

## எதிர்மறை

–கரக்கடப் பொடியன்–



சில நாட்களாய்
என் மனச்சுவர்களில்
பச்சோந்தியொன்று
வண்ணம்பூசி
வண்ணம்பூசிச்
செல்கிறது
முன்னூற்றறுபது
பாகையில்
முப்பரிமாணமாய்
விரியும்
பார்வையும்
வாழும் சூழலின்
வண்ணத்தைப்போல்
தன்னை மாற்றி
தக்கதாய்
தன்னைத் தகவுளதாய்
மாற்றி
பொருளிடம் காலம்
உய்த்துணர்ந்து
இலட்சியப் புள்ளியை
மட்டும்
இலக்கிட்டு பயணிக்கும்
பச்சோந்தி
எதிர்மறையாய்
ஆகிப்போனதெப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளும் பேரொளி !

-தில்லைநாதன் பவித்ரன்-

அந்திப்பொழுதொன்றில்
ஞாயிற்றை கண்டவர்கள்
சிரித்தார்கள், வானின்
அடியிலும் கடலின்
விளிம்பிலும் அது மறைவது கண்டு
கொண்டாடினார்கள்
ஞாயிறு இல்லா விடியலை
சூரியமரணம் எனப்
பெயரிட்டார்கள்

தம் விடியலைத் தொலைத்தல்
பற்றி அவர்களிடம்
எந்த உரையாடலும்
அப்போது இருந்திருக்கவில்லை

மாற்றுச்சூரியனும் இல்லாத
இடைவெளியில் சூரிய
மறைவை கொண்டாடத்
துணிந்தார்கள்

நீண்ட உறக்கத்தின் பின்னிரவில்
வந்த பேரொளியின்
இளவலைக் கண்டு மனம்
சஞ்சலித்து தங்களைத்
தாமே கிள்ளி உணர்
நிலையை சரிசெய்து
கொண்டார்கள்
பேரிருள் கிளித்து வரும்
ஞாயிற்றைப் பார்கவும்
முடியாதவர்களாக மறுநாள்
அந்தியில் அதன் மறைவை
பார்த்து கொண்டாடினார்கள்
சலன உறக்கத்தின் பின்னிரவில்
நிலவுடன் ஒளி ஒப்பந்தம்
செய்து கொண்டார்கள்

பின்னும் சிரித்தார்கள் சூரியன்
வந்தது அவர்கள் சிரித்தபடியே
இருந்தார்கள்
ஆனால்
எட்ட முடியாத வானத்தின் மீதும்
ஏற முடியா மலைகளின் மீதும்
தாண்ட முடியாத கடல்களின் மீதும்
சூரியன் வந்து
கொண்டிருந்தான்

இன்னும் அவர்கள்
காகக் கூடுகளில் இருந்து
சிரித்துக் கொண்டுதான்
இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவனின்றேல் உலகில்லை...

சம்பூரணி
சுஜந்தினி யுவராஜா-

எச்சங்கள் கொண்டு வாழும்
தமிழினத்தின்
பச்சை வயல்
வேளாண்மைப் பாரம்பரியம்
இச்சகத்தில் இன்றுவரை
அழியாமல் தொடருதே
அச்சமின்றி
அனைவருக்கும் பசிபோக்கும்
அமுதமாய்!

மண்ணில் நெல்மணிகள்
விளைச்சலைத் தந்திடவே
விண்ணின் மழைக்காய்
எதிர்பார்த்துக்
காத்திருந்து
கண்விழித்து வயலில்
காவல் செய்து
எண்ணமே வேளாண்மை
என்றெண்ணி வாழ்பவன்!

சேற்றுவயலில் மகிழ்வுடன்
கால் பதித்து நாற்றுகள்
பலவும் நன்றாய் நட்டு
ஊற்றுடன் கூடிய நீரைப்
பாய்ச்சி
சோற்றை உண்ண
பாடுபடும் சேவகன்
அன்றைய முன்னோர்கள்
கண்டெடுத்த பொக்கிசமாய்
இன்று உயிர்களை வாழவைக்கும்
அற்புதமாய்

என்றும் மறவாது நாம்
அனைவரும்
நன்றியோடு இருப்போம்
உணவளிக்கும்
உழவனுக்கே!

முப்போகம் செய்து
வரமளிக்கும் நிலம்
எப்போதும் பசுமையுடன்
காட்சி தந்திடவே
தப்பேதும் செய்யாமல்
உழைத்திடும்
உத்தமர்களுக்காய்
செப்புகின்றேன்
உழவனின்றேல் உலகில்லை..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விமானத்தைக் கடத்திய போராளிகளின் கோரிக்கைகள் ஒரு நாட்டுடன் மட்டுமல்லாது பல நாடுகளுடன் தொடர்பு பட்டதாக இருந்தமையாலும் அவை நிறைவேற்றப்பட முடியாதவையாக இருந்தமையினாலும் இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ரேபின் அவர்கள் தன்நாட்டின் உளவுத்துறைத் தலைவரான திரு யிட்சாக் ஹோபியை தனியாக அழைத்துப் பேசினார். உலகின் திறன்வாய்ந்த உளவுத்துறையான "மொசாத்"தின் தலைவரது திட்டமும் நம்பிக்கையும் இஸ்ரேலியப் பிரதமரை திருப்திப்படுத்தியிருக்க வேண்டும். உளவுத்துறைத் தலைவரது திட்டத்திற்கு முழு அங்கீகாரத்தினை வழங்குவதற்குப் பிரதமர் ரேபின் தீர்மானித்தார். திட்டத்தினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் நிமையமேனும் தாமதிக்க வேண்டாம் எனக் கூறி உளவுத்துறைத் தலைவரை அனுப்பினார் பிரதமர். எனினும் உடனடியாக அத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கான அனுமதியினை அரசாங்கம் வழங்கினாலன்றி செயற்படுத்த முடியாது என்ற நிலை உளவுத்துறைத் தலைவருக்கு இருந்தது. இந்நிலைமையின் தீவிரத்தன்மையினை உணர்ந்த பிரதமர் ரேபின் அவர்கள் அமைச்சரவையினை உடனடியாக அழைத்து திட்டத்தினை தெளிவுபடுத்தி அனுமதியினைப் பெறுவதற்குத் தீர்மானித்தார். பிரதமர் ரேபின் அவர்கள் இஸ்ரேலிய அமைச்சர்களை இத்திட்டத்திற்குச் சம்மதிக்க வைப்பது அவ்வளவு எளிதானதாக அமைந்து விடாது என்பதை உணர்ந்திருந்தார். ஆகையினால் அமைச்சரவைக் கூட்டத்திற்கு உளவுத்துறைத் தலைவர் மற்றும் படைத்துறைத் தலைவர்களையும் அழைத்திருந்திருந்தார்,

அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்பாக போராளிகள் கொடுத்த காலக் கெடுவினை நீடிக்க வேண்டிய தேவை இஸ்ரேலியர்களுக்கு இருந்தது. எப்படி அதனைச் செய்யலாம் என்பதனை சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தார்கள். இதுதான் அந்த முடிவு "முதலில் இஸ்ரேலியச் சிறைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் நாற்பது(40) பாலஸ்தீனப் போராளி-களை விடுதலை செய்கிறோம். அதனைச் செய்வதற்கு இஸ்ரேலிய அரசு நீதிமன்றக் கட்டளைகளைப் பெறவேண்டும். அதற்கு எமக்கு சிலநாட்கள் தேவை. அதன் பின்னர் மீதமிருக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றுகி றோம்''. இம் முடிவானது கோரிக்கையாக விமானத்தைக் கடத்தியவர்களு-க்கு அனுப்பி வைக்கப்பட்டது. பதில் சாதகமாக வரும் என்பதனை பிரத-மர் நன்கு அறிந்தே இருந்தார். பதில் வரும்வரை காத்திராமல் இஸ்ரேல் நாட்டின் 'வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு' எடுக்கப்பட்ட அந்த அமைச்சரவை யைக் கூட்டினார் பிரதமர் ரேபின். அமைச்சர்களை கூட்டத்திற்கு வரவேற்ற பிரதமர் ரேபின், கடத்தல்காரர்களை எவ்வாறு இஸ்ரேல் எதிர்கொள்ளப் போகிறது என்ற திட்டத்தை விபரித்தார். கூட்டத்திலிருந்த அரைவாசி-க்கு மேற்பட்ட அமைச்சர்கள் தங்கள் கண்களின் புருவத்தை உயர்த்தி வியப்பிலாழ்ந்தனர். சிலரோ் பிரதமருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என எண்ணிக்கொண்டனர். இன்னும் சிலரோ நடப்பதைக் கதைக்காமல் கால-த்தை வீணாக்கும் செயலைச் செய்கிறார் என தம்மனதினுள் எண்ணியது மட்டுமல்லாது பிரதமர் உரையாற்றி முடிந்ததும் கூட்டத்தில் நேரடியா-கவே அவரிடம் சொன்னார்கள். எனினும் இவ்வாறான எதிர்ப்புகள் வரும் என்பதை அறியாமல் அமைச்சரவைக் கூட்டத்தை பிரதமர் கூட்டவில்லை. உளவுத்துறைத் தலைவர் தமது திட்டத்தை இன்னும் விபரமாக எடு-த்துரைத்தார். பல மணிநேர கருத்துமோதல்களுக்குப் பின்னர் கதைத்-துக் களைப்படைந்த நிலையில் உறவுத்துறைத் தலைவரதும் படைத்-தலைவர்களதும் உறுதியான வார்த்தைகளின் மீது நம்பிக்கை வைத்த அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதுடன் திட்டத்திற்கு ஒப்புதலளித்தனர்.

''நமது இஸ்ரேலிய வீரர்கள், உகண்டா நாட்டின் தலைநகரான எண்ரபேயில் உள்ள விமான நிலையத்திலே கடத்தித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விமானத்தையும் பயணக்கைதிகள் அனைவரையும் அதிரடித்தாக்குதல் நடாத்தி அவர்களை மீட்பார்கள்'' இதுதான் திட்டம். கற்பனையில் கூட நினைத்துக்கூடப் பார்க்க முடியாத திட்டம் அது. ஏனென்றால் ''இஸ்ரேலில் இருந்து எண்ரபே விமான நிலையம் 4595 கிலோ மீற்றர்கள் தூரத்தில் உள்ளது. படையினர் அனைவரும் விமானம் மூலமாகவே போய்ச் சேர வேண்டும்.''

"விமானத்தைக் கடத்தியவர்கள் திறன்வாய்ந்த திட்டமிடலுடன்கூடிய பலஸ்தீனப் போராளிகள்" "உகண்டாவில் உலக சர்வாதிகாரி என சொல்லப்படுகின்ற இடி அமீன் ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் விமான நிலையத்திற்குத் தானே நேரடியாகச் சென்று கடத்தல்காரர்களைச் சந்தித்து வருகின்றார்" இவற்றினை எல்லாம் கரு-த்தில் கொண்டே அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு பயணக்கைதிகளை மீட்பது என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டது.திட்டம் நிறைவுறும்வரை அரசி யல் ரீதியிலான தலையீடுகள் எதுவுமே எமக்கு இருக்கக் கூடாது என உளவுத்துறை கோரியது. பிரதமருக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் மாத்திரம் அனைத்துத் தகவல்களும் பரிமாறப்படும் என்றும் கூறினர். அமைச்சரவையானது உளவுத்துறைத் தலைவரின் கோரிக்கைக்கு இணங்கி யது. இஸ்ரேலியப் படைத்தளபதிகளும் உளவுத்துறையினரும் உடன-டியாக செயலில் இறங்கினர். நடத்தப்போகும் அதிரடித் தாக்கதலுக்கு "Operation Thunderbolt - தாக்குதல் இடி முழக்கம்" எனப் பெயரிட்டனர்.

**இஸ்ரேலிய உளவுத்துறைக்குக் காத்திருந்த சவால்**

பலஸ்தினத்தில் உள்ள மக்கள் மீது இஸ்ரவேல் நாட்டின் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்தமையினால் 1972 ஆம் ஆண்டு உகண்டாவின் அதிபர் இடிஅமீன் அவர்கள் இஸ்ரேல் உடனான சகல அரச தொடர்புகளையும் துண்டிந்துவிட்டார். இதனால் இஸ்ரேலியர்கள் அனைவரும் உகண்டா நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். ஆதன் பின்னர் உகண்டா நாட்டுடனான எந்தத் தொடர்புகளும் இஸ்ரேலியர்களு-க்கு இருக்கவிலலை. இப்படியான நிலையில் இஸ்ரேலிய உளவாளிகள் நேரடியாக உகண்டாவிற்குள் நுழைய முடியாத நிலை இருந்தது. இவ்வா-றான சூழ்நிலைகளை கவனத்திலெடுத்து இந்த தாக்குதல் திட்டத்தினை நடாத்துவதற்குப் பொருத்தமான ஒருவரை நியமிக்க வேண்டும் என ஆரா ய்ந்த போது உளவுத்துறைத் தலைவரின் எண்ணத்தில் வந்தவர்தான் 'டேவிட் கிம்சே'.

உளவுத்துறைத் தலைவர் டேவிட் கிம்சேயை அழைத்துத் தாக்குதல் திட்டத் திற்கான உளவுத் தகவல்களைப் பெறும் நடவடிக்கைகளை அவரிடம் பொறுப்பளித்தார். உடனடியாக செயலில் இறங்கினார் அவர். உகண்டா வினுள் நேரடியாக நுழைவதென்பது கனவிலும் நினைத்தப்பார்க்க முடியாத நிலையில் தனது சகாக்களுடன் உகண்டாவிற்குப் பக்கத்து நாடொன்றின் உதவியினை எந்த நாட்டில் பெற்றக் கொள்ளலாம் என்பதனை ஆராய்ந்தார். உகண்டாவின் எல்லையருகிலே உள்ள ருவாண்டா, கொங்கோக் குடியரசு, தென்சூடான், கென்யா, தன்சானியா ஆகிய நாடுகளை ஒவ்வொரு நாடா க அந்நாடுகளில் உள்ள தமக்குச் சாதக, பாதக நிலைகளை ஆராய்ந்-தார்கள். கென்யா மற்றும் தன்சானியா ஆகிய நாடுகள் பயணக்கைதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்து வைக்கப்பட்டுள்ள விமானம் உள்ள என்ரபே விமானத்தளத்திற்கு அண்மையில் உள்ள நாடுகள் மட்டுமல்லாது விக்டோரியா ஏரியினையும் (Victoriya Lake) எல்லைகளில் கொண்டவை. கடற் படை மூலமாக தாக்குதலை நடத்துவதற்கும் ஏற்ற நாடுகளாக இருந்தன. ஆகையினால் தன்சானியா மற்றும் கென்யா ஆகிய இரு நாடுகளையும் விரிவாக ஆரா ய்ந்தார்கள்.

நிறைவில் கென்யா பொருத்தமான நாடு என முடிவினை டேவிட் உளவுத் துறைத் தலைவருக்கு அறிவித்தார்.

அம்முடிவானது பொருத்தமானதாகவே உளவுத்துறைத் தலைவருக்கும் தெரிந்தது. அதற்கு பிறரிடம் கூற முடியாத கரணியமும் இருந்தது. அது உளவுத்துறைத் தலைவரான யிட்சாக் ஹோபி அவர்களுக்கு மாத்திரமே தெரிந்த உண்மை.




(கென்யாவின் நிலைப்பாடு எப்படி இருந்தது? இஸ்ரவேல் என்ன செய்தது? என்பவற்றை அடுத்த தொடரில் பார்ப்போம்)

(தொடரும்...)

கடதாசி ரோசா பூக்கள் நிறத்தில்
கோதுமை மா மிட்டாய்க்காறன்

சிவப்பு, மஞ்சள், பச்சை
வண்ணத்தில்
சிரித்துக் கொண்டிருக்கும்
குச்சி ஐஸ்க்காரன்.

பட்டாம் பூச்சிகள் மொய்த்தது
போல்வாழைக்
குடலில்
குத்தி வைத்த பம்பாய்
மிட்டாய்க்காறன்

கச்சான் காறனும்
உப்பு மாங்காய்க் கிழவியும்
இனிக்க இனிக்க நிறையும்
திருவிழாக்கள்
அத்தனை இலகுவானதல்ல
ஏழைச் சிறுவர்களுக்கு.

-சத்தியப்பிரபா
கடற்கரைச்சேனை-






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டி செய்த கத்தரிக்காய்ப் பொரியல்!

-ஷெல்லிதாசன்- (08.12.2022)

(இது எங்கடை கிராமத்து வாசனை)

பாட்டி பொரித்த கத்தரிக்காய்
பொரியல் வீடெல்லாம் ஒரு
அலாதி வாசத்தை
அள்ளித் தெளித்தபடி.
அதற்கு மேலாக அதனோடு கலந்த
நல்லெண்ணை வாசம்
நாசித்துவாரத்தால் உள்ளேறி
நாவூற வைத்தது.

அப்பா வாங்கிவந்த பிஞ்சுக்
கத்தரிக்காயளை அழகாக
வெட்டியெடுத்த பாட்டி
மிளகாய் தூள் உப்புப்போட்டு
பிரட்டியெடுத்து நல்லெண்ணையில்
பொரித்த பொரியலை...
ஆசையாசையாக பேரப்
பிள்ளைகளான எங்களுக்கு
சுடச்சுட அவித்த புட்டுடன்
சேர்த்து பிசைந்து பிடிச்சுத்தந்த
அந்தப் பாசம் கத்தரிக்காய்
பொரியலுக்கு மேலும் சுவையூட்டி
இன்னும் வேணும் வேணுமென்று
ஆலாபனை பண்ண வைக்கின்றது.

அப்பா வாங்கி வந்த
கத்திரிக்காயளிலை
அரைக்கரைவாசி வெறும் சூத்தை
அம்மா புலம்பியிருந்தாள்.

"போடி புள்ளை எப்பபாத்தாலும்
அவன் பெடி வாங்கிவாறதிலை ஒரு
நொட்டை உனக்கு" என அம்மா -
வை திட்டிய எங்க பாட்டி
அந்தக் கத்தரிக்காயளிலை
ஒருதுண்டும் மிச்சம் மீதி
வைக்காமல் பொரிச்ச பொரியல்
கூனி இறால் போட்ட
கத்தரிக்காய் பொரியலையே
தூக்கியடித்தமாதிரி அத்தனை
கம..கம..வாசம் அத்தனை சுவை
சொல்லி வேலையிலை.

எங்கடை பாட்டியெண்டா
பாட்டிதான் இப்படி அவ
பாத்துப் பாராமல் செய்யும்
சமையல் சாப்பாடுகளை சப்பிட
நீங்களெல்லாம் கொடுத்து
வைக்கவேணும்...ஓ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரித்தாளும் தந்திரமும் தமிழின அரசியலும் !

-திரு. ராசரத்தினம் நேமினாதன்-
களுதாவளை

மக்கள் தங்களிடையே முரண்பாடுகளைத் தவிர்த்து அரசியல் ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாக வும் ஓரளவிற்கேனும் தங்களிடையே ஒத்த கருத்துகளை உடையவர்களாக இருந்துவிட்டால் அது ஆட்சி யாளர்களுக்கு பெரும் சவாலான விடயமாகும். இது அதிகாரத்தைப் பிழையான வகையில் பயன்படுத்தும் நேர்மையற்ற, ஊழலான, வன்முறையை, ஒடுக்குமுறைகளை விரும்பும் ஆட்சியாளர்களுக்கு மிகவும் சிக்கலாக அமைந்து விடலாம். புரட்சிகள், ஆட்சிமாற்றங்கள், கொள்கைக் கருத்தியல் மாற்றங்கள் போன்றவற்றிற்கு மக்களது ஒற்றுமை-தான் அடிப்படையானது. வரலாறு நமக்குக் கற்றுத்தரும் பாடமும் அதுவே. ஆட்சியாளர்கள் மக்கள் தங்களுக்கு எதிராக அணிதிரளாது பார்த்துக் கொள்வதற்கு பிரித்தாளும் தந்திரம் (Divide and rule) என்னும் மிகச் சிறப்பானதொரு உத்தியைக் காலங் காலமாகக் கையாண்டு கொண்டிருக் கிறார்கள். பிரித்தானிய காலணித்துவ ஆட்சியாளர்களின் இராசதந்திர உத்திகளில் இதுவும் ஒன்றாகும்.

தமிழர்கள் உலகின் தொன்மையான ஓரினமாகக் காணப்பட்ட போதிலும் தமக்கென்ற தன்னாட்சி அலகற்ற ஓரினமாகவே இருக்கிறார்கள். இவர்களிடையே இந்தப் பிரித்தாளும் நுட்பம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதைச் மிகச்சுருக்கமாக இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்போம். உண்மையில் தமிழர் வரலாறும் பிரித்தாளும் நுட்பமும் பெரியதொரு ஆய்வுப்பரப்பாகும். பொதுவாகத் தமிழரிற்குள்ளே பல ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகள், உட்பகைகளும் மலிந்தே காணப்படுகின்றன. இதில் ஏதாவதொரு முரண்பாட்டினை அல்லது அடுக்கமைவுச் சிக்கலை எடுத்து நோக்கினால், இச்சிக்கல் உருவாகிய போது அல்லது அதன் ஆரம்பத்தில் சற்று நிதானமாக யோசித்திருந்தால் அல்லது பக்குவமாகக் கையாண்டிருந்தால் பல சிக்கல்களை தவிர்த்திருக்கலாம், என்று முரண் பாடுகள் வளர்ந்த பின்னர் சாதாரண மக்களே சொல்லிக்கொண்டிருப்பர். ஆனால் நாம் வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் யோசிக்கத் தவறித்தானிருக்கிறோம், யோசித்திருந்தால் பல உள்முரண்பாடுகள், மோதல்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். இம்முரண்பாடுகள் தற்செயலானதா? திட்டமிடப்பட்டதா? வரலாற்றில் தமிழினத்தினுள்ளே உள்ளக மோதல்கள் ஏன் ஏற்பட்டன? போன்ற விடயங்கள் தனித்தனியே ஆய்வு செய்யப்படவேண்டிய பாரிய வினாக்களாகும். அதனைச் செய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல, இம்முரண்பாடுகளுக்கும் பிரித்தாளும் நுட்பத்திற்கும் உள்ள தொடர்பினை மேலோட்டமாக சொல்வதே எமது நோக்கம். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் தமிழர்கள் தங்களுக்கான தன்னாட்சி அரசினை தாங்களே அமைத்துக்கொள்ளும் வாய்ப்பினை இழந்து நீண்ட காலமாகி விட்டது. ஆனாலும் அந்த விருப்பு தமிழ் மக்களின் மனங்களின் ஆழத்தில் இருக்கத்தான் செய்கிறது. வரலாற்றுக் காலத்தில் பேரரசர்களாக இருந்தவர்கள், காலவோட்டத்தில் நலிவுற்று சிற்றரசர்களாக, குறுநில மன்னர்களாக இருந்து அழிந்தார்கள். இன்றைய ஜனநாயகக் காலத்திலும் அது தொடர்கிறது. ஆண்ட இனமாக இருந்ததனால் அதிகார வேட்கையோடு இருக்கின்ற மக்கள் என்னும் வகையில் இவர்களுள்ளே உள்ளக முரண்பாடுகள் சாதாரணமாகத் தோன்றலாம். வெளிச் சக்திகளின் பாதிப்புகளாலும் உள்ளக முரண்பாடுகள் தோன்றலாம்.

ஐரோப்பியர் வருகையின் பின்னர் அவர்கள் அமைத்த ஆட்சியலகில் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசமும் ஏனைய இனங்களின் அதிகாரத்தின்கீழ் இருந்த பிரதேசமும் ஒரே ஆட்சிப் பிரதேசமாக அந்நியர்களது தேவைக்காக வலிந்து ஒன்றுசேர்த்து ஓரலகாக உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் இரண்டாம் உலக யுத்தம், ஐ.நாவின் தோற்றம், ஜனநாயகக் கோட்பாட்டின் வளர்ச்சி, சுதந்திரப் போராட்டங்கள் உருவானமை போன்ற பல காரணங்களால் வெள்ளையர்கள் தாங்கள் குடியேற்ற நாடுகளாக ஆண்ட இடங்களை சுதந்திர நாடுகளாக்கிவிட்டு வெளியேறினர். வெளியேறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பிரித்தானியர் உருவாக்கிய அல்லது ஒருங்கிணைத்த புவியியல், ஆட்புல அடிப்படையிலே அப்பிரதேசங்கள் தனித்த நாடுகளாயின.

உண்மையில் இந்நாடுகள் பலவீட்டுத் துணிகளை ஒன்றாகச் சேர்த்து ஒட்டுப்போட்டு உருவாக்கிய பிச்சைக்காரனின் கிழிசல் சட்டைபோலத்தான் உள்ளன. அந்நியர் ஆட்சிக்கு முன்னர் குறித்த நிலப்பரப்பானது தனித்த இனங்களுக்கு அல்லது அந்தந்த மக்கள் கூட்டத்திற்கென்று தனித்தனி அலகுகளாக அல்லது தனித்த அரசுகளாக இருந்தன. அதாவது சுதேச மன்னராட்சிக்காலத்தில் இவை தனித்துவமான தனித்தனி இராச்சியங்களாக இருந்தன. பிரித்தானியர் ஆட்சியின் பின்னர் சனநாயகம் என்று சொல்லப்படுகிற அமைப்பு உருவானது. பிரித்தானியர் ஆட்சிக்கு முன்னர் இருந்ததுபோன்ற இனங்களுக்கான ஆட்சியலகின் புவியியல் எல்லைகளில் ஜனநாயகம் என்று சொல்லப்படும் ஆட்சியமைப்பு உருவாகியிருக்குமாயின் அத்தேசத்தில் ஜனநாயகத்தின் கூறுகள் மேலும் வலிமைபெற்றிருக்கலாம். ஆனால் இங்கு ஆட்சிசெய்த அந்நியர்களின் தேவைக்காக ஒன்று படுத்தப்பட்ட இந்நிலப்பரப்பானது காலத்திற்கேற்ப தம்மீது ஜனநாயக வர்ணத்தைப் பூசிக்கொண்டதுதான் நடந்துள்ளது.


தமிழர்களின் நிலமும் ஏனைய இனங்களின் நிலமும் அந்நியர்களின் ஆட்சியில் அவர்களது தேவைக்காகச் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு அவர்கள் வெளியேறும்போது அந்தந்த நிலத்திலே அதிக மக்கள் தொகையைக் கொண்டிருந்த "பெரும்பான்மை" என்று சொல்லப்பட்ட மக்கள் கூட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நாடுகளில் தமிழர்களின் அரசுகளுக்கு என்ன நடந்தது என்று சிறிதுகாலம் வரலாற்றின் வழியே பயணஞ் செய்தால் அறிந்துகொள்ளலாம். உண்மையில் குடியேற்றவாதிகள் தங்களது தேவைக்காக உருவாக்கிய நாடுகள். அவர்கள் விட்டுச்சென்ற பின்னர் தனித்த நாடுகளானது. உண்மையில் ஒருங்கிணைந்த ஒரு தேசத்தினுள் தமிழர்களின் நிலமும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு தற்போதுள்ள நாடுகள் உருவாக்கப்பட்டன.

பிரித்தானியர்கள் தங்களது ஆட்சியை நடத்துவதற்காகக் எண்ணிக்கையில் குறைந்த அளவு படைவீரர்களுடன் மற்றும் குறைந்த எண்ணிக்கையான துப்பாக்கிகளுடனும் மக்களை இலகுவாக ஆள்வதற்குப் பிரித்தாளும் உத்தி எனும் இராசதந்திரத்தையும் பயன்படுத்தினர். அதாவது தாங்கள் ஒன்றிணைத்த பகுதியில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக் கென்ற தனித்துவமான நிலப்பரப்பைக் கொண்டிருந்தனர். எனி-னும் தம்மை நோக்கிப் பாரிய எதிர்ப்புகள் தோன்றாமலும் மக்கள் ஒன்று சேர்ந்து தமக்கு எதிராகக் கிளர்ந்தெழாமலும் இருப்பதற்காகவும் இனங்களை ஒன்றுடன் ஒன்று பகைநிலையை உருவாக்கி தம்மை நோக்கித் திரும்ப வேண்டிய எதிர்ப்பை மடை மாற்றிவிட்டு நிலங்களை ஒருங்கிணைத்து தங்களது ஆட்சியைத் தந்திரமாக நடத்தி-னர். அதாவது எம்மைப் பிரித்து அவர்கள் ஆண்டனர்.



அதன்பின்னர் நாடுகள் சுதந்திரம் பெற்றதும் பிரித்தா னியரிடமிருந்த ஆட்சிப் பொறுப்பு இங்கிருந்த பெரும்பான்மை இனங்களின் கைக்குச்சென்றது. பல்வேறு இனங்களையெல்லாம் சனநாயக முலாமின் கீழ் ஆளுகின்ற ஆட்சியாளர்கள் தமக்கு பெரும்பான்மை என்னும் சனநாயகச்சார்பு முக மூடியை அணிந்துகொண்டனர்.

இவ்வாட்சியாளர்கள் எல்லோருக்கும் வரலாற்றில் தமிழர் என்கிற இனம் பாரிய சவாலாகத்தான் இருந்தது. அறம், நல்லாட்சி, விடுதலை, சுதந்திரம் போன்ற நீதிசார் கருத்துகளை காலங்காலமாக தமது வாழ்வியலிலும் "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்..!" என இலக்கியங்களிலும் வழிபாடுகளிலும் சுதந்திர உணர்வுகொண்ட மக்கள் கூட்டமாகிய தமிழர்கள் ஆளும் இனங்களுக்குச் பாரிய சவாலாகத்தான் இருக்கிறார்கள். இந்நிலையில் ஆட்சியாளர்கள் தமிழரைக் தங்களது கட்டிப்பாட்டில் வை-த்துக்கொள்ளும் உத்திகளை யோசிக்கத்தொடங்கினர். பிரித்தானியர் பயன்படுத்திய பிரித்தாளும் உத்தி மிகவும் நுட்பமானதும் பயனளிப்பதா-கவும் உருவாக்கிவிட்டவர்களுக்கு இழப்புகளற்ற உத்தியாகவும் இருந்-ததை அவர்கள் வரலாற்றில் நேரடியாகவே கண்டிருந்தார்கள். அதனால் அந்த உத்தியைக் கையிலெடுத்தனர். பிரித்தானியர்கள் இனங்களு-க்கு இடையே பிரித்தாளும் உத்தியைத்தான் பயன்படுத்தினர். ஆனால் அவர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றபின்னர் வந்த ஆட்சியாளர்கள் இனத்திற்கு உள்ளேயே உள்ளகப் பிரிவினைகளை உருவாக்கி ஓரினத்தையே கூறுபோட்டுப் பிரித்து ஆண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கென்ற தனித்துவமான நிலத்தை இழந்திருந்த மக்களான தமிழர் என்கிற இனத்தில் இருந்து இஸ்லாமியர்களைப் பிரித்தனர். தமிழ்நாட்டில் தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் தமிழராகத்தான் உள்ளார். கேரளத்தில் மலையாளம் பேசும் இஸ்லாமியரகள் மலையாளியாகத்தான் உள்ளார். அந்தந்த மொழிபேசிக்கொண்டு அந்தந்த இனமாகத்தான் இஸ்லாமியர் இருக்கிறார்கள். இலங்கையிலுள்ள இஸ்லாமியர்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கின்றபோதிலும் தமிழரைக் கூறுபோடும் வேலை த்திட்டத்தில் இஸ்லாமியர்கள்-முஸ்லீம்கள் என்று தனியொரு இனமாகப் பிரிக்கப்பட்டனர்.

மதத்தை வைத்து இனம் வகுக்கப்பதாக இருந்தால் இலங்கையில் கிறிஸ்-தவர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்தவ இனம் தனித்தவொரு இனம் உள்ள-தா? மதத்தை வைத்து இனம் பிரிப்பதாயின் கிறிஸ்தவர்கள் தனி இனமா-கப் பிரிக்கப்படவில்லையே? பெரும்பான்மை இனத்திலும் கிறிஸ்தவர்கள் உள்ளார்களே அதனால் கூறுபோட இயலாதுபோயிருக்கலாம். அதே வேளை இலங்கையிலுள்ள மலாயர்களின் மதம் இஸ்லாம்தான், ஆனால் அவர்களை முஸ்லீம்களினுள்ளே சேர்க்கவில்லை. மலாயர் தனித்த இனமாகத்தான் உள்ளனர். இஸ்லாத்தைப் பின்பற்றினாலும் மலா யர்கள் வேறு இனமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

இலங்கையில் உள்ள இஸ்லாமியர்கள் அனைவரும் தமிழ்தானே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை முஸ்லிம் என்று தனித்த இனமாகக் கூறுபோட்டு தமிழர்களைப் பிரித்தாண்டனர். ஒருவர் தான் பின்பற்றும் மதத்தினை மாறிக்கொள்ளலாம் ஆனால் இனம் என்பது மாறிக்கொள்ள முடியாதது. அதுதான் பொதுவான உலகவழக்கு, கோட்பாட்டு வழக்கு. ஆனால் இந்து ஒருவர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டால். இலங்கையில் உள்ளபடி அவரது இனமும் மாறிவிடும். இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் இவர்கள் தனித்தனியே இரண்டு இனங்களாக ஆக்கப் பட்ட பின்னர் தமிழர்களாக, முஸ்லீம்களாக தங்களுக்கிடையே மோதிக் கொண்டாற்கூட இதை இரண்டு வெவ்வேறு இனங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலாக எம்மை எண்ணவைத்ததுதான் பிரித்தாளும் திட்டத்தைவைத்து எம்மைப் பிரித்தவர்களின் வெற்றி.

அடுத்த கட்டமாக தமிழர் இனத்தைப் பிரித்தாளுவதற்காக அவர்கள் பிறந்த இடத்தினை அடிப்படையாக வைத்து உருவாகிய ஏற்றத்தாழ்வனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடலாம். பூர்வீக இடத்தினை வைத்து எவருக்கும் முரண்பாடுகள் தோன்றுவது சாதாரணமாக நடப்பது தான். பிரித்தானியாவிற் கூட இலண்டனில் வாழ்பவருக்கும் லிவர்பூலில் வாழ்பவர்களுக்கும் அதேபோன்று வேறு இடங்களிலும் முரண்பாடுகள் உள்ளன. ஆனால் அதுவெல்லாம் நீண்ட காலப் பகையோ, மோதலோ உருவாகுவதற்கு காரணமாக இல்லை. ஆனால் இதனைப் பெரும்பிளவாக மாற்றியமைக்கப்பட்டதற்குப் பின்னால் திட்டமிட்ட மூளைகள் இருக்கலாம். அதற்கு இராசதந்திரம் என்று பெயரும் வைக்கப்பட்டிருக்கலாம். ஆங்கிலேயர்கள்கூட தங்களுக்குள்ளே ஒருவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பதை வைத்து அல்லது ஆங்கில உச்சரிப்பு, சொற்களின் பயன்பாடு, தொழில், வாழ்க்கைமுறை என்பவற்றில் வேறுபட்டுத்தான் உள்ளனர் ஆனால் அவர்களுக்குள்ளே மோதலை உருவாக்கிக்கொண்டதில்லை. சிங்களவர்களிடையே கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்று பிறந்த இடத்தினை அடிப்படையாகவைத்து வேறுபாடு உள்ளதுதான் என்பதையும் கவனியுங்கள். எனினும் இனத்திற்கான சவால் தோன்றும்போது அவர்கள் பிரதேசம் மறந்து சிங்களவர்வர்களாக தம்மை அடையாளப்படுத்திக்கொள்கிறார்கள்.

தமிழர்களிடையே மட்டும் பிரதேசவாதம் ஒரு பிரிவினையாகக் கட்டமைக்கப்படுவதற்கு பிறந்த இடம் மட்டுமே காரணம் என்பது நம்புவதற்குக் கஸ்டமாகத்தான் உள்ளது. பிரித்துவைக்கவேண்டிய தேவை யாருக்கு உள்ளது? என்று யோசித்தால் நிறைய விடயங்கள் விளங்கலாம். பிரதேசவாதம் வேறு பிரதேச நலன்வேறு என்பது பற்றிய தெளிவு மக்களிடையே குறைவாகக் காணப்படுவது முக்கியமானதொரு விடயமாகும். பிரதேசவாதம் பேசுவோரை பிரதேச நலன் பேசுவோராக மக்கள் எண்ணிக்கொள்வது ஆபத்தானது.

பிரதேசப் பிரிப்புக்கூட வடக்கான், கிழக்கான் என்பதோடு மட்டும் நின்று விடாது அதற்குள்ளே பிரதேசம், மாவட்டம், வேறுபல பிரிவினைகளை கொண்டதாக பிரிவினை உள்ளது. இவ்வாறான பிரிவினைகள் எல்லாம் வெளியேயிருந்துதான் உருவாக்கப்பட்டது. நாங்கள் பிரிவினைகளை ஊக்குவிப்பவர்கள் அல்ல என்று நல்ல பிள்ளைக்கு யாரும் நடிக்க வேண்டியதில்லை. இந்தப் பிரிவினைகளில் நமக்கும் பெரும்பங்குண்டு. தமிழர்களிடையே பல முரண்பாடுகள் காணப்பட்டாலும் இனம் என்று வருகிறபோது ஒன்றுபட முடியாமல் தடுப்பதற்கு இந்த முரண்பாடுகளை வைத்து இலாபமீட்டுபவர்களின் கைகள் உள்ளதை நாம் உணரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் பிரித்தாளப்படுவதற்கு அடிப்படையான முரண்பாடுகளுக்கான காரணத்தை நோக்கினால் அது தனிப்பட்ட தனிநபர்களின் முரண்பாடு சார்ந்ததாகவே பெரும்பாலும் காணப்படும் ஆனால் அதனைப் பிரிவினையாக்குவதற்கு யார் யார் புறப்படுகிறார்கள்? என்று நிதானமாகத் தேடினால் கண்டடைவதற்கு வரலாற்றில் நிறைய தடயங்கள் கிடைக்கும். தமிழர்கள் அண்ணன், தம்பியாக, மாமன், மச்சானாக நண்பனாகப் பேசித் தீர்த்துக்கொள்ளக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள அனுமதிக்காது பிரதேசவாதம், மேட்டுக்குடி போன்ற சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பிரித்தாளும் எண்ணங்கொண்டவர்கள் பயன்படுத்திக்கொண்டனர். பிரித்தாளும் நுட்பத்தை வெள்ளைக்காரனிடம் கற்று நாம் சிறுபான்மை இனங்களிடையே கூர்பார்க்கிறோம். எமக்குப் பிரித்தாளும் தந்திரத்தைச் சொல்லித்தந்தவர்கள் தமது நாட்டில் உள்ள வேல்ஸ்மொழி, ஐரிஸ்மொழி ஆகிய மொழிகளைப் பேசும் மக்களை தந்திரோபாயமாக பிரித்தே ஆளுகிறார்கள். ஆனால் குறிப் பிட்டுச் சொல்லுமளவிற்கு வன்முறைகள் எதுவுமே தோன்றுவதில்லை. இனங்களைப் பிரித்து ஆளுவதும் தனியொரு இனத்தை உள்ளகமாகக் கூறுபோட்டுப் பிரிப்பதாக இருந்தாலும் ஆள்பவர்களுக்குச் சாதகமான பலனைக்கொடுத்தாலும் ஆளப்படுபவர்களின் அனுபவங்களின் அடிப்படையில் பிரித்தாளும் இராசதந்திரம் மிகமிக அநாகரிமானதுதான்.

● ● ●

## தாழமுக்கம்!

–கனக, தீபகாந்தன்–

அந்த பச்சைக் கடல்மேலே
பதுங்கும் வேங்கைபோலே
கறுத்தப் பட்டுப் போர்த்தி
களம்காண வருவாளோ
கோடி மத்தளங்கள்
கொட்டி வரவேற்க
வெள்ளி வண்ணங்களில்
சதிராட்டம் காண்பிக்க
வானமகள் நாணுகின்றாள்
அலைகளின் கொண்டாட்டம்
படகுகளின் திண்டாட்டம்
கடலும் வானும் புணரும் நேரம்
*காற்றிடை வெளியே*
திரளானதோ தாழமுக்கம்..
பாரியும் கர்ணனும்
பாராத கொடைதனையே
பாரில் படைத்திடவே
பருவமழையென
*பரந்துமூழபொழிந்தாளோ?
*பார் எங்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு-கனவு-சூரியன் மற்றும் பனியும் மழையும்

-ஜே. பிரோஸ்கான்-



கனவுகள் தான் எனக்குத் துனண.
உரையாடத் தொடங்குகிறோம்
ஒவ்வொரு உரையாடலிலும்
ஒவ்வொரு சொற்களாக
பொறுக்கிக் கொள்கிறேன்
ஏன் என்றால்

என்னிடம் சில புத்தகங்கள்
இருக்கின்றன படித்துக்
கொள்ள சொற்கள்
நிறைந்திருக்கின்றன
எழுதிக் கொள்ள. நிச்சயமாக
எழுதுகோல் இருக்கிறது.

இப்போது நான் உறங்க வேண்டும்
கனவுகள் காத்திருக்கின்றன.
பனி இரவென்பதால்
கம்பளிப் போர்வை அவசியம்.
நிசப்தம் அறைகளை முழுக்க
நனைத்திருக்க
நான் உறங்க வேண்டும்.

கரப்பான்பூச்சியின் சிறுநீர்
வாசனை பிடிக்காது.
பல்லிகளின் கீச்சல் அறவே
பிடித்ததில்லை. இப்போது
கனவு காணப்போகிறேன்
துணை கிடைத்துவிட்டது
உறங்குவதற்கு. இரவுகளில்

உறக்கம் கலைவதற்கு முன்
என்னிடமிருக்கும் சொற்களை
ஒன்று சேர்த்தாக வேண்டும்.
கனவு இப்போது புன்னகைகளை
உதிர்க்கிறது. சொற்களை
கொஞ்சம் அகற்ற வேண்டும்
கனவுகள் அழுவதாகவே
கவிதையை எழுதிக்
கொண்டிருக்கிறேன்.

இப்போது என் மேல்
மிளிர்கிறது பிரகாச சூரியன்.
கனவு உரையாடலை முடித்து
வைக்கிறது. நான் இப்போது
சூரியனோடு உரையாட
தொடங்குகி றேன். சூடு உடலை
பரவிக்கொள்கிறது என் மேல்
பொழிந்து செல் மழையே
என்கிறேன். இன்னும் இன்னுமாக
சூரியன் சூடு பரப்புகிறது.
எதற்கு உரையாடலில்
நிபந்தனை மீறுகிறாய் சூரியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தை திருப்பிக் கொள்கிறது
என் மென் உடல் உனை ஏற்க
மறுக்கிறது. அகன்று விடு
உரையாடலை முடித்துக்
கொள்வோம். அப்படியொரு
கோபமுனக்கு. என் மேல் விழாமல்
மென் பனியே சூரியனை நனை.

நான் அதன் கோபத்தில் வெந்து
மீளவருகிறேன் என் புருவங்களை
மீண்டும் குளிர்விப்பாயா
மென் பனியே.

மனசு புன்னகைக்கிறது சாமத்து
நிலவே வெளிச்சம் ஒழியேன்
உறங்கப் போகிறேன். கனவே வா
உன்னில் மிதக்கவிடு
கவிதை எழுதி முடித்து
விட்டேன். சொற்களை
பத்திரப்படுத்திக் கொள்
உரையாடலை இன்னொரு
கணம் தொடங்கும் வரை.

■ ■ ■

---

# வினை விதை

-க. ஷியா-

நித்தமும் துவைத்துப் போடும்
என்னைத் தின்று பசியாறும்
வெயிலின் மிச்சம் நான்

வேலிக் கொழுக்குகளை நீவி நீவி
இடை தெரித்து மெதுமை
தேடுகிறாய்
தேகம் புடைத்த காயம்

ஒரு பஞ்சுப் பூனையின்
புருவங்களிடையே
கொஞ்சி விளையாடும்
காற்றுக்கு சலிப்பு மேவுகிறது

கார்காலமாகக் கூட இருக்கலாம்
நெஞ்சுப் பகுதியிலிருந்து
கண்ணீர் மல்க
புளித்த வாடை நீ நகர்கிறாய்

நாளைக்கு குளித்துத்
துடைத்துக் காத்திருக்கிறேன்
வந்து போன தடயம் இன்றி போ!

ஒரு புகை மூட்டியின்
நகர்வுக்குள் எல்லாம்
முடிந்தாகிவிடும்
விதைத்துப் போ
விழையட்டு உலகில் குதிக்கும்
நேரம்
உன்னை
உரித்துக் குதிக்கட்டும்
பாவக் குழந்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோணி

-தேவகி வாசி-
நோர்வேய்



அந்தப் பெருங்கடல் எப்போதும் பேரிரச்சலுடன்தான் அலையடித்து கரைவந்து கொண்டே இருக்கும். அந்த இரைச்சல்களுக்கு மத்தியிலும் கரையோரமெங்கும் அடுக்கடுக்காக குடிசைகளும், ஒரு சில பெரிய கல்வீடுகளும் கண் கொள்ளாக் காட்சியாக நிமிர்ந்து நிற்க அவைகளுக்கு நடுவே ஒரு அழகிய மாளிகை போன்ற பெரியதொரு வீடும் பார்ப்போரைக் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தது.

அந்தக் கரையோரம் எங்கும் வசிப்பவர்கள் கடலோடிகள். அவர்கள் குடிசைகளில் வாழ்ந்தாலும் பெரும்பாலானோர் நடுத்தர வர்க்கத்தினராகவே வாழ்ந்து வருகின்றனர். ஒரு சில குடும்பங்கள் ஏழைகளாக இருந்தாலும். அங்கு உள்ளவர்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் உதவிசெய்து கொண்டு வாழ்பவர்களாகவே வாழ்ந்து வருபவர்கள்

இந்தக் குடிசைகளுக்கு நடுவேதான் பெரிய பணக்காரரான சிங்கராயர் என்னும் கடலோடியும் வாழ்ந்து வருகிறார். அவருடைய வீடுதான் அந்தப் பெரியமாளிகை போன்ற அழகிய வீடு. அவரை எல்லோரும் பெரியவர் என்றும் சம்மட்டியார் என்றும் அழைத்து வந்தனர்.

அந்த அழகான வீட்டில் சிங்கராயரது அழகிய குடும்பமும் வாழ்ந்து வருகிறது. அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி மலரோடும் மகள்கள் ஜானகி மற்றும் வைஸ்ணவி கடைக்குட்டி மகன் கர்ணனோடும் மகிழ்வான வாழ்வு வாழ்ந்து வருகிறார்.

சிங்கத்தார் எப்போதும் சுறுசுறுப்பாகவும் கலகலவென எல்லோரோடும் சிரித்துப்பேசும் நல்ல பண்பான மனிதராகவும் அந்தக் கடலோர மக்களிடையே வலம்வந்து கொண்டிருப்பவர். பணக்காரன் என்றாலும் பெருமைகள் இல்லாது எல்லோரையும் சக மனிதனாக பார்ப்பவர். இல்லை என்று அவரிடம் வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது அள்ளிக் கொடுத்து பாசம் காட்டும் அன்பான கொடையாளி. அவர் எப்போதும் யாரையும் நம்பிவாழாது கடலையே நம்பிவாழும் கடலோடி. கடலின் உப்புநீர் உடம்பில் பட்டால்தான் சிங்கத்தாருக்கு தூக்கமே வருமாம்.

வாடை என்றோ குளிர் என்றோ பாராது கடலுக்குச் சென்று வலைவீசி எகிறிப் பாயும் மீன்களை எல்லாம் அள்ளி எடுத்துக் கொண்டு கரை சேரும் சோம்பல் இல்லாத தைரியமான கடலோடி என்றால் சிங்கத்தார் மட்டும்தான் என்று அவ்வூர்க்காரர் பேசிக்கொள்வது கடலோரம் எங்கும் கேட்டுக் கொண்டே இருக்கும். நடுக்கடலில் நங்கூரம் இட்ட படகில் இருந்தபடியே வலை வீசுவதில் வல்லவனாகவும் இருந்து வருகிறார். சிங்கத்தார் எப்போதும் தன்னோடு தோணி இல்லாத ஏழை இளைஞர்களையும் அழைத்துச் சென்று அவர்களுக்கும் வருமானம் கிடைக்க உதவி செய்வதை வழமையாகக் கொண்டவர்.

சிங்கத்தார் மூன்று தோணிகளுக்கு சொந்தக்காரன். ஒரு தோணியை தன் தொழிலுக்கும் மற்றைய இரண்டையும் தோணி அற்ற இளைஞர்களுக்கு கொடுத்து அவர்களும் கடலோடி மீன் பிடித்துவரக் கடனாக கொடுக்கும் பழக்கத்தை பழக்கப் படுத்திக்கொண்டுள்ளார். அவரிடம் அடிக்கடி தோணியை கடனாக வாங்க வருபவர்களான அயல் வீட்டில் இருக்கும் ஏழைகளான குட்டியும் பாலனும் சிங்கத்தார் வீட்டுக்கு வந்துபோவது வழமையாகிவிட சிங்கத்தாருக்கும் இருவரையும் பிடித்துப் போக இருவரையும் பாராட்டி மகிழ்ந்தபடி தன்கதையைத் தொடர்ந்தார்....

தம்பிகளே! நானும் உங்களைப்போல சிறுவயதில் வறுமையில்தான் வாடி வாழ்ந்தனான். என் பதினான்கு வயதிலேயே எனக்கென்று ஒரு தோணி இல்லாமல்தான் பெரிய கடலோடிகலோட சேர்ந்து கடலுக்குப் போய் வலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசக் கற்றுக் கொண்டும் அவர்களுக்கு உதவிசெய்து கொடுத்தும் வந்-தகாலம் அது அந்த காலம் மறக்க முடியாத காலம். அன்று இளமையில் பசி வாட்டியது. வயிறார எப்ப சாப்பாடு தருவா அம்மா என்ற ஏக்கம். அதனால நானே ஒரு முடிவுக்கு வந்தேன். பள்ளிப்படிப்பு வேண்டாம் என நினைத்து பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிட்டு அம்மா நித்திரையில் இருந்து எழும்ப முதலே, விடியற்காலை நான் எழுந்து கடற்கரைக்குச் சென்று காத்திருப்பேன். பெரும் கடலோடிகளுக்காக அவர்களை கண்ட-தும் அவர்களிடம் கெஞ்சிக் கேட்டு அழுதுதான் அவர்களுக்கு உதவியாக சென்று கடலோடி வந்து அவர்கள் தரும் கொஞ்சக் காசிலதான் என் அம்மாவையும் பார்த்து வந்தேன்.

என் அப்பா நான் பதினொரு வயதா இருக்கும் போதே இறந்து விட் டார். நானும் அம்மாவும்தான் தனியாக ஓலைக் குடிசையில இருந்தோம். மழை பெய்தால் வீட்டுக் கூரையில் இருந்து வீட்டுக்குள்ள வெள்ளம். எங்களைக் கவனிக்க அந்தநேரம் யாரும்வரவில்லை. என்கையே என-க்குதவி என்று நினைத்தேன். அந்தக்கொடிய நேரத்தில எனக்கு தையி ரியம் வந்தது. வாழ்வா சாவா என்ற முடிவோடு கடற்கரையில் காத்திருந்து யாரைக் காண்கிறேனோ அவர்களிடம் கெஞ்சி அழுது தோணியில் ஏறிச் சென்று விடுவேன். அப்படிப் போனதாலே சிறுவயதிலேயே வலை வீசுவ தைப் பழக்கிக் கொண்டு அதில் வல்லவனாகவும் திகழ்ந்தேன். என்வலை வீச்சில் நிறைய மீன்கள் அகப்பட்டு துடிப்பதைப் பார்த்த தோணியின் சொந்தக்காரன் மகிழ்ச்சி அடைவார். அதனால் பெரிய கடலோடிகளுக்கு மத்தியில் பிரபலமானேன். என்னைக் கண்டதும் போட்டி போட்டு ஓடி வருவார்கள். என்று சொல்லிக் கொண்டே பாத்தீங்களா தம்பிகளே நான் கெஞ்சிய காலம் மாறி அவர்கள் கெஞ்சிற காலமாக இருந்தது. எல் லோருக்கும் முயற்சியோட தன்னம்பிக்கை இருந்தாலே போதும் வாழ்வில் முன்னேற என்று சொல்லிய சிங்கத்தார் உணர்ச்சி வசப்பட்டவராக தன்-தந்தையின் கதையையும் சொல்லத் தொடங்கினார்.

என்ர அப்பா கோடைகாலம் என்றோ பனிக்காலம் பெரும் புயல் என் றோ அலைஎன்றோ பாராமல் பழஞ்சோற்றுப் பொதியோடு விடியற்காலை எழுந்து கடலோடச் சென்று விடுவாராம். அப்படி ஒருநாள்தான் எம் வாழ் வில் இடி விழுந்தால் போல் ஆனது. என் தந்தை வலைவீசி கொண்டிருந்த வேளை சீறிவந்த மழையும் ஒளிப்பிளம்பாய் வந்தமின்னலும் வெறி
கொண்ட புயலும் சுழன்றடித்து தோணியை புரட்டியடித்ததால் அப்பா கட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் விழுந்து கடலுக்குள்ளேயே இறக்க நேர்ந்தது என்று கண்ணீர் துளி-கள் துள்ளிவிழ கவலையோடு சொல்லி முடிக்க அதைக் கேட்ட பாலன் தன் நிலையை எண்ணிய படி, ஐயா! நீங்கள் கடந்த காலத்தில் இருந்த நிலமைதான் இப்ப எங்களுக்கு என்று சொல்லியபடி உங்கட உதவி எங்களுக்கு வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டோம் என்று பாலனும் சொல்ல சிங்கத்தாரும் 'தம்பி' என்று தொடர்ந்தார்.

பாலன் உங்கள் இருவருக்கும் நல்லகாலம் வரும் காத்திருங்கோ. நீங்களும் என்னைப்போல விடாமுயற்சி உடையவர்கள். அதனால் எதனையும் வெ-ன்று வெற்றி காணுவீங்கள். நம்பிக்கையோட இருங்கோ கடந்த காலக் கஸ்டங்களை நினைத்துக் கொண்டிருக்காமல் ஆக வேண்டியதைப் பாருங்கோ. நல்லதே நடக்கும் என்று சொல்லியபடி வீட்டுக்குள்ளே நுழைந்-தவர் விறாந்தையில் உள்ள நாற்காலியில் இருந்து யோசித்தபடி மூத்த மகளுக்கும் வயதாகி கொண்டே போகுது கலியாணமும் கை கூடுதில்லை என்று நினைத்தவருக்கு பாலனின் நினைவு வர பாலனும் அருமையான முயற்சியுடைய பொடியன், அவனை கேட்டு விரும்பினால் நேர காலத்தே-தாட கலியாணத்தை செய்து வைச்சிடலாம். சீதனமாக ஒரு தோணியைக் கொடுத்திடலாம். அதை வைத்தே அவனும் என்னைப்போல என்மகளைப் பார்த்திடுவான் என்று நினைத்த படியே தூங்கி விட்டார்.

ஓரிரு மாதங்கள் ஒடின. சிங்கத்தாரின் ஆசைப்படியே பாலனுக்கும் ஜானகிக்கும் திருமணம் நடந்தேறியது. தோணி ஒன்றும் பரிசாகக் கொடுத்து பாலனையும் தோணியின் சொந்தக்காரனாக்கி அவர்களின் இல்லற வாழ்வின் சிறப்பைக் கண்டு மகிழ்வுற்றிருக்க இளையமகள் வைஸ்ணவியும் குட்டியைக் காதலிப்பதாக தந்தையிடம் சொல்ல அகமகிழ்ந்த சிங்கத்தார் குட்டிக்கும் வைஸ்ணவிக்கும் மணம் முடித்து வைத்துவிட்டு தன் இன்னொரு தோணியை அவர்களுக்கும் கொடுத்து மகிழ்ந்தார்.

தனக்கென்று இருந்த தோணியை தன் மகனுக்கும் கொடுத்து விட்டு மனசுக்குப் பிடித்த மருமகன்கள் கிடைத்ததையிட்டு வாழ்நாள்வரை மகிழ்வோடு வாழ்ந்தார் மூன்று தோணிகளின் சொந்தக்காரன் சிங்கராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டை....

-காரையன் கதன்-

தாமரைகள் எடுத்து
விகாரைக்கு செல்ல
புறப்படுகின்றேன்.

ஆசையை
சுமந்து திரியும் நிலையை
அனுபவித்தால்
நீங்களும் வாருங்கள்.

போதனையில்
வாழ்வை சொல்லிவிட்ட
புத்தபெருமான் முன்
நான்
நீங்கள்
மனிதர்தான்.

காவி உடைத் தவசிகள்
ஆழ்ந்த தியானத்தில்
எந்த பூமியில்
இப்போதும்
இருக்கிறார்கள்.

ஆயுதங்கள் எல்லாம்
வெடித்து ஓய்ந்து
அழுகுரல் கேட்டு
வாழ பழகிய
நாடு இது!

எங்கே
என்னை உங்களை
வரவேற்க யாரும்
இதயத்துடன்
இன்றும் இல்லைதான்.

கவனம்
ஆடைகளை களைந்து
அம்மணம் காட்டுவோம்
யார் பாதுகாப்பு படைவீரர்கள்.

எங்கள்
அடையாள அட்டை
இறுதியில் இதைத்தான்
உங்களிடம் இருந்து
பெற்றுத் தருகிறது.

ஆதலால்
இந்த மலர்களின்
கண்களை மூடிக் கொள்ளுங்கள்
நாங்கள் அம்மணம்
ஆகி ஆடை அணியும் வரை.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறப்பு

-அஹமது பைசல்-
பொத்துவில்



வாசிக்கத் தொடங்கினேன் எதிரில் வானொலி சத்தம் போட்டபடி இருந்தது. சத்தத்தை நிறுத்தினேன். சுவரில் பதித்திருந்த மின் விளக்குகளின் பொத்தான்களைக் கீழ் நோக்கி அழுத்தினாள் ஆசிபா. விளக்குகள் எரிந்தன. ஆனால் அது இரவல்ல. வெளிச்சத்தைப் பார்த்து எதையோ கேட்க நினைத்தவள் போன்று நின்றாள். எரியும்போது மின் விளக்குகள் சத்தம் போடுமோ என நினைத்து அதை முந்திக்கொண்டு நான் சத்தமாக வாசித்தேதன் எனக்கு அந்தக் குதிரையை பரிசாகத் தந்தவரின் பெயரை. அவரது பெயரில் ஓர் எழுத்து அடி நாக்கில் இருந்து கொண்டு மிருதுவாக வெளியே வந்தது ஒரு மண் புழுவைப்போல. நீர் குடிக்க வந்த மானின் பதட்டமும், பயமும் எனக்கிருந்தது. "பருந்திற்கும் மேகத்திற்கும் என்ன இரகசியம் வேண்டியிருக்கு" என்று வானத்தில் என்றோ பார்த்த ஒரு காட்சியை நினைத்து என் முன்னே நின்று கோபப்பட்டாள் ஆசிபா. நான் அவர் பெயரை ஒரு தடவைக்கு மேல் வாசிக்காமல் நிறுத்திக்கொண்டேடன். ஒரு தடவை வாசித்தாலே புரிந்துவிடும், சில புத்தகங்கள் போல இருந்தது அவரது பெயர்.

கோபம் தணிய, ஆசிபா வாசலுக்குப் போய் கிளிக் கூட்டைத் திறந்தாள். அது அவளுக்கு விருப்பமான கிளிகள். முதுகில் மஞ்சள்நிறக் கோடுகள் போடப்பட்ட கிளியை கையால் பிடித்து அதன் அலகை விரல்களால் பிடித்து திறந்தாள். அதன் அலகு மேல் நோக்கியும், கீழ் நோக்கியும் விரிந்தது. அந்த கிளிக் கூட்டிற்கு இரு பக்கமும் அழகான சிறிய சாளரங்களும் இருந்தன. அந்தச் சாளரத்தின் பக்கமாக நின்று ஒரு கிளி சிறகை வி ரிக்கும். அப்போது அந்த சாளரத்துக்கு திரைச் சீலை விரித்தாற்போல் சிறகுகள் சில நேரங்களில் என்னை ஏமாற்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சாளரங்கள் கிளியை விட சற்று பெரிது என்றும் சொல்ல முடியாது, சிறிது என்றும் நம்ப முடியாது. அதற்கு திறப்பு இல்லை. விரலினால் பி-டித்து மேல் நோக்கி அந்தச் சிறிய பலகையைத் இழுத்துவிட்டால் கி-ளிகளுக்கு விடுதலை கிடைத்தாற்போல் இருக்கும். ஆனால் அந்தக் கிளிகள் சாளரம் வழியாக வெளியே வர முயற்சிப்பதுமில்லை. அது வேண்டி நிற்பது நிரந்தர விடுதலையைத்தான். மாறாக தப்பி ஓடுவலை-தயல்ல என்பதை ஆசிபா எப்போது புரிந்துகொள்வாளோ! அது இரண்டும் இரண்டு நிறத்தில் இருந்ததே ஒழிய சாதி இல்லை.

அன்று அந்த கிளிகளை வாங்குவதற்கு சந்தைக்குப் போகும் வழியில் அவளுக்கு ஏழு வயது என்ற என் நினைப்பு என்னை முந்திரிக் கொட்டை-போல் முந்திக்கொண்டு சந்தைக்குச் சென்றது. இப்போது அவளின் வயது என்ன? அவளின் இரு கால்களையும் பெரிய கண்கள் உள்ள சங்கி லியால் சுற்றி ஒரு நடுத்தரமான செம்பு நிற பூட்டை போட்டு பூட்டிவிட்ட-ார்கள். அந்த பூட்டின் திறப்பை என்னிடம் கொடுத்திருந்தார்கள். இப்போது அவளுக்கு வயது எத்தனை என்று நான் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதில்லை. யாரோ கண்டுபிடித்து பதின்மூன்று என்று சொன்னாற்பே-பால் நினைவிருக்கு.

திறப்பு என் கையில், பூட்டு அவள் காலில். மருத்துவமனையில் இருந்து அவர்கள் வருகிறார்கள் என்றால் மாத்திரம் பூட்டுவேன். ஆசிபாவின் உடல் நிலையை அவர்கள் சோதித்துவிட்டுச் சென்ற மாத்திரத்தில் தி-றந்து விடுவேன். அவள் சில நேரம் என் தலை மயிரைப் பிடித்து இழுத்து விளையாடுவாள். நான் மாடு மாதிரி கத்திக்கொண்டு நடப்பேன். ஆசிபாவு-க்கு, அந்தக் குதிரையின் முதுகில் அடர்த்தியும், அடர்த்தி இல்லாமலும் இருக்கும் இள மஞ்சள் உரோமங்களை மிகவும் பிடிக்கும். தொட்டுப் பார்த்த நொடியே "என்ன உரோமங்கள். என்ன மென்மை. மொறு மொ-றுவென்று காதுக்கு கேட்காமல் கேட்கும் சத்தம் வருதே" என்பாள். அந்-தக் குதிரையை பரிசாகத் தந்தவர் அவர்தான். அவரென்றால்? அவள் தந்தை. அவள் புல்லாங்குழலை உதட்டில் வைத்து மெதுவாக வாசிக்கத் தொடங்கினாள். குதிரை அந்த அறையின் சாளரம் வழியாக எப்படி வெ-ளியேறிச் சென்றது என வியக்கும்படி சாளரத்துக்கு வெளியே புல் மேய்ந்-துகொண்டிருந்தது. குதிரையின் வாய் பட்ட புல்நுனியில் இருந்து சின்ன, மென்மையான சிறகுகள் கொண்ட அந்துப் பூச்சிபோல அவை பறந்து பக்கத்தில் உள்ள புல்நுனியில் உட்கார்ந்தன. அந்தக் காட்சியை திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கும் ஜன்னல் வழியாக பார்த்தால் மனதுக்கு இதமாக இருக்கும். ஆனால் அதைப் பார்க்க அவள் உம்மாவும் இல்லை யோகா பயிற்சி வகுப்புக்குச் சென்றுவிட்டாள். குதிரை இடமும் வலமுமாக வாலை ஆட்டுகிறது. அவள் குழந்தைப் பருவத்தில் கெத்தி நடந்ததை விடவும் மெதுவாக நடக்கிறது. புல்லாங்குழல் இசை வீடெங்கும், அறை அறையாக நிறைந்திருந்தது. ஆசிபாவுக்கு பத்து வயது நடக்கும்போது, புல்லாங்குழல் ஊதும் போட்டி ஒன்றில் ஜனாதிபதி கையால் தங்கப்பதக்கம் வென்றாள்.

அன்றிலிருந்து அவள் வீட்டுக்கு வகை வகையான புல்லாங்குழல்கள் வரத் தொடங்கிற்று. அதன் பிறகு அடிக்கடி வாசல் கதவு திறந்தே கிடந்தது. இதைக் கரணியமாக வைத்துக்கொண்டு அவன் அழகிய புல்லாங்குழல் ஒன்றுடன் இரண்டாவது முறையாக வீட்டிற்குள் நுழைந்தான். அவசரமாக நுழைந்தான். அவசரமாக நுழைந்ததில் அவன் பாதணிகள் பிரிவைச் சுமந்துகொண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்தன. இவ்வளவு தூரம் கூடவே வந்த பாதணிகள், அவள் வீட்டுக்குள் போய்ப் பார்க்க ஆசைப்படாதா? அங்கிருக்கும் புதிய பாதணிகளிடம் தன்னையும் அறிமுகம் செய்ய விரும்பாதா? பாதணிகளைப் பற்றி அறியாத மக்கு இவ்வளவு அவசரமாகப் போய் தன்னை அவளிடம் அறிமுகம் செய்ய என்ன வேண்டிக் கிடக்கு. "ரெக்கார்டர் - விசில் குடும்பத்தின் ஒரு நீளமான புல்லாங்குழல். பிக்கோலோ புல்லாங்குழல் - குறுக்கு புல்லாங்குழல். வழக்கத்தை விட இரண்டு மடங்கு குறைவு. இது மிக உயர்ந்த ஒலியைக் கொண்டுள்ளது. டிம்பர் மிகவும் பிரகாசமானது, மற்றும் மியூசிக் டைனமிக் ஃபோர்டே ஸ்விஜி மூலம் இது மிகவும் துளையிடுகிறது. நவீன ஓபோ: மியூசெட், கூம்பு பெல் கொண்ட ஓபோ, பாரிடோன் ஹார்ன், ஆங்கில ஹார்ன் பரோக் ஓபோ: பரோக் ஓபோ டி **& quot** மன்மதன், ஓபோ ஆம் கச்சா அல்லது வேட்டை ஓபோ. அவனைக் கண்டதும் ஆசிபா படித்துக்கொண்டிருந்த "காற்றின் கருவி" புத்தகத்தை மூடி வைத்துவிட்டு மாடிப்படியை அண்டியுள்ள சுவரில் ஏறு வரிசையாக தொங்கவிடப்பட்டிருந்த வகை வகையான புல்லாங்குழல்களின் பக்கம் விரைந்தாள். அதில், இரு விரல்களையும் வைத்து கண்களால் ஏறி மாடிக்குச் சென்றாள்.


இவன் யார்? வெளிநாட்டுக்காரன் மாதிரி கோட் சூட் போட்டிருக்கிறானே. என்னைத்தான் காண வந்திருந்தான். அவனை அலட்சியமாக பார்த்தபடி படிகள் ஏறுவதிலே ஆர்வமாக இருந்தாள். அவன் கையில் இருந்த புல் லாங்குழலோடு ஒரு சிவப்பு ரோஜாவும் கொண்டுவந்திருந்தான். ரோஜாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ்கள் புல்லாங்குழலின் துளைகளை உரசிக்கொண்டிருந்தன. அடுத்த விநாடியே வீடெங்கும் ஒரு மெல்லிய குழல் இசை கேட்பதுபோல இருந்தது. அவள் நின்றவாறு அவனைத் திரும்பிப் பார்த்தாள். அப்போதுதான் அவன் அதைச் சொன்னான். "உன் கையில் இருக்கிற மச்சம் அழகா இருக்கு" அது அவளுடைய கை என்பதால் தன்கையை திரும்பவும் பார்க்க அவள் விரும்பவில்லை. அவனைப் பார்த்தாள். அவன் திரும்பவும் அவள் கையைப் பார்த்தான். அது வலது முன் கை. அதில் இருந்தது திறப்பு வடிவிலான மூன்று இஞ்சி நீளமும், ஒரு இஞ்சி அகலமும் கொண்ட ஒரு மச்சம். மச்சத்தின் குடும்ப நிறம் கருப்பு என்பதால் இது சற்று வித்தியாசமான இளங்கருப்பாக இருந்தது. தவிடு படிந்தாற்போல் சாந்தமான மெல்லிய உரோமங்களும் அதில் இருந்தன. இந்த மச்சம் திடீரென உருவானதல்ல. ஒரு யுத்தத்தைப்போல, காலமெடுத்து, நேரமெடுத்து, சந்தர்ப்பமொன்றை காத்திருந்துதான் உருவானது. அந்த சந்தர்ப்பத்தை அவள் அடைந்தபோது அவள் வயது, ஒரு கையில் இருக்கும் விரல்களின் எண்ணிக்கைதான். ஒளித்து விளையாடுவதற்காக அந்த விரல்களின் எண்ணிக்கையொத்த அல்லையகார பிள்ளைகளோடு சேர்ந்துவிட்டாள்.

"காக்கையரே காக்கையரே"
"ஓ"
எத்தின முட்ட இட்ட"
"மூனு"
"மூனுல ரெண்டக் குடிச்சிட்டு ஒன்ட எடுத்திட்டு ஓடியா" என்றாள்.



ஒரு பிள்ளை. ஆசிபா அந்தப் பழங்கால அலுமாரிக் கதவைத் திறந்து உள்ளே ஒளித்துக்கொண்டு கதவை அடைத்துவிட்டாள். கன நேரமா. நானும் என்ட தந்திரமெல்லாம் செய்து பார்த்தன். கதவு விடியச் சாமம்தான் திறந்தது.

ஆசிபாவின் உம்மா காவல்துறைக்குப் போக வெளிக்கிட்டாள் நான்தான் தடுத்தன். வாப்பாக்காரன் பிரான்ஸில. இதெல்லாம் அவருக்குத் தெரியாது. வால் பக்கமாக மஞ்சள் பூசியிருந்தது. உடல் கருப்பு. தலை ஒரு இரத்தத் துளிபோலவும், அலுமாரிக்குள்ளே பலகையில் ஒட்டி இருந்தது அந்த புழு. அந்த அலுமாரிக்குள்ளிருந்து ஆசிபா வெளியே வந்தபோது அவள் உடல் கொதியாய்க் கொதித்தது. அன்று காய்ச்சலோடுதான் ஆசிபாவின் பொழுது விடிந்தது. பயப்பாட்டுக்கு தண்ணி ஓத மைமுனாச்சியை கையோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டியந்தாள் றிபாயா.
அவளுக்குப்பிள்ளை என்று ஆசிபா மட்டும்தான். பெரிய வெள்ளிவாளி நிறையத் தண்ணீர் கொண்டுவந்து மைமுனாச்சிக்கு முன்னால் வைத்-துவிட்டு நிமிர்ந்தாள். சுவரோடு முதுகைச் சாய்த்துக்கொண்டிருந்த மை-முனாச்சி தண்ணீரை ஒரு பார்வை பார்த்தாள். தண்ணீரின் இதயம் திக் திக் என்றது என்னவோ வாளிக்குள் இருந்தபடி தண்ணீர் அசைந்தது. அது குழந்தை உறங்குவதற்காக ஆட்டிவிட்ட தொட்டிலின் கடைசி ஆட்டம் போல இருந்தது. தண்ணீரை மைமுனாச்சி ஓதிப் பார்க்கும் போது கடவாய் கிழியாதபடி "ஆ" வென்று கொட்டாவி விட்டாள். வெற்றிலை போட்ட வாய்தான். இருந்தும் சுத்தமாக இருப்பது வாளிக்குள் இருந்த தண்ணீரில் தெரிந்தது. மொத்தம் எத்தனை கொட்டாவிகள் என்று எண்ணிக்கொண்டுவந்தேன் இறுதிக் கொட்டாவி வந்த விதத்தைக் கண்டு மொத்தக் கொட்டாவியும் எத்தனை என்ற கணக்கை மறந்துவிட்டேன். அப்போது ஆசிபா என்னைப் பார்த்து மெல்ல சிரித்தாள். மூன்று முறை உள்ளங்கையில் தண்ணீரை எடுத்து ஆசிபாவின் முகத்தில் விசிறியடித்தாள் மைமுனாச்சி. சற்றுமுன் சிரித்துக்கொண்டிருந்த அந்தப் பிஞ்சி முகத்தைப் பார்த்த எனக்கு கண் கலங்கிற்று.

மிச்சத் தண்ணீரால் ஆசிபாவின் உடல் முழுவதையும் கழுவிவிட்டு உள்ளே துடைக்கத் துண்டெடுக்கப் போனாள் றிபாயா. தனது சேலை மற்றும் உள்ளாடைகளையும் கழுவுவதற்காக எடுத்த வாக்கில் கொஞ்சம் உதறினாள். அதன் உள்ளிருந்து அவளின் நேற்றைய உடல் கீழே விழுந்ததோ என்னவோ அப்படி அவள் குனிந்த குனி நிமிராமல் கீழே பார்த்துக்கொண்டு நின்றாள். அப்போதுதான் அவள் கண்களில் படாமல் ஊர்ந்து அலுமா ரியின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்பதுபோல் நின்று மறைந்தது அந்தப் புழு. சிறு கம்புத்துண்டொன்றால் அதைத் தூக்கி வெளியே எடுக்க வேண்டும் என்று நினைத்தேன். எனக்கென்னமோ இந்தப் புழுதான அதைச் செய்திருக்க வேண்டும். இந்தப் புழுவைப் பார்த்துதான் ஆசிபா பயந்து கத்தியிருக்க வேண்டும். றிபாயா வெளியே வந்ததும் ஒரு கம்புத் துண்டால் அந்தப் புழுவைத் தொட்டேன் புழு கம்பைக்கட்டி அணைத்துக்கொண்டது. நீண்ட நாள் பாசத்திற்காக ஏங்கியிருக்கும்போல. வெளியில் கொண்டு போய் மண்ணில் போட்டு உற்றுப் பார்த்தேன். அதன் கண்களில் அந்தக் கனவு தெரிந்தது. இத்தனை நாளாக அலுமாரிக்குள் இருந்துகொண்டு ஒரே கனவைத்தான் கண்டிருக்கிறது. அதன் கனவில் தோன்றியது அந்த பழைய அலுமாரித் திறப்புதான் என்று நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்றால் அந்தக் கதவைத் திறப்பதற்கான முயற்சியில் புழு திறப்பைத்தான் முதலில் தேடியிருக்கும். இது காட்டில் வாழும் ஒரு வகைப் புழு.

கனவு காண்பது இதற்கு மிகவும் பிடிக்கும் என்று ஒரு புத்தகத்தில் படித்திருக்கிறேன். இல்லையென்றால் எப்படி? ஆசிபாவின் கையில் அந்த பழைய அலுமாரியின் திறப்பை உரிச்சி வச்சாப்போல் இருக்கிறது மறு. சிறிய தழும்பாகத்தான் வந்தது. பிறகு மறைந்து விட்டது. மீண்டும் சில நாட்களின் பின் அந்த மறு வந்துவிட்டது. இதை நானோ அவள் உம்மாவோ கண்டுகொள்ளவில்லை. பிள்ளையின் உடம்புக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. மாறாக பிள்ளையின் வலது முன்னங்கைக்கு அந்த மறு அழகாகத்தான் இருந்தது. ஆனால் அந்த மருத்துவர்களுக்குத்தான் ஐயம்.

இவள் அடைக்கப்பட்ட அலுமாரிக் கதவுகளைத் திறப்பு இல்லாமல் கையை வைத்தே திறக்கின்றாள். ஐந்து வயதில் இருந்த சுறுசுறுப்பான பேச்சு எதுவுமே இல்லை. அடிக்கடி வீட்டைவிட்டு வெளியே ஓடுகிறாள் என்றால் இதை மன நோய் என்று சொல்ல முடியாது. மாறாக என்னவென்பது? இனி ஆசிபாவின் கால்களுக்கு சங்கிலிப் பூட்டுத் தேவையில்லை. எந்த மருந்துகளும் தேவையில்லை. இது ஒரு நோயில்லை. என்று மருத்துவர் முடிவு செய்துவிட்டார். என்ற மகிழ்ச்சியான செய்தியைக் கேட்கும் தொலைபேசி அழைப்பிற்காகத்தான் நான் காத்திருந்தேன்.

“குதிரை எப்படி இருக்கு? நீ சவாரி போக பழகிவிட்டாயா?” என்று அவன் ஆசிபாவைப் பார்த்துக் கேட்டான். “இல்லை இன்னும் இல்லை” என்றேன் நான் எதிரே வந்து. கதிரையில் இருந்தவன் எழுந்து நின்றான். றிபாயா தனது அறைக்குள் நாளைய யோகா மாணவிகளுக்கான செய்முறைப் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தாள். அவள் உடல் இறுக்கமாக, ஒரு
கம்பீரமாக இருந்தது. அவன் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை.
ஆசிபாவின் கையில் இருந்த திறப்புவடிவ மச்சத்தையே பார்த்தான்.
“நான் இன்னும் ஒரு வாரத்தில் பிரான்ஸ் போகிறேன். ஆசிபாவின் வாப்பா அவளை நலம் விசாரித்து வரச் சொன்னார்” என்றான் அவன். “அவர் அன்பாகத் தந்த குதிரை சுகம் என்று சொல்லுங்கள் போதும். அவர் பெயரை மகள் மறந்துவிட்டாள் என்றும் சொல்லுங்க” என்றாள் யோகா ஆசனத்தில் இருந்தவாறு.
“உங்கள் மனைவி லமாவுக்கு என் சலாத்தைச் சொல்லுங்கள்” என்றாள்.
“வீட்டில் அவரின் புகைப்படம் ஒன்றுகூட இல்லை என்றும் சொல்லுங்கள்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நான் குறுக்கிட்டேன். அவன் கண்கள் எதற்கோ அவதியுறுவதுபோல் இருந்தன.

“மூன்று வருடத்திற்கு இரண்டு வாரம் லீவில் வாரவர்தானே” என்று அவன் கையில் இருந்த புல்லாங்குழலையும், அந்த ஒற்றைரோஜாவையும் ஆசிபாவின் பக்கம் நீட்டினான் “என் வாப்பாவின் பெயர் எனக்குத் தெரியாது உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டாள் அவனருகில் வந்த ஆசிபா. அவன் கொடுத்த புல்லாங்குழலில் அவர் பெயர் எழுதியிருந்தது. அவள் பார்க்கவேயில்லை.

அப்போது தொலைபேசியில் மருத்துவர் அழைத்தார். ஆசிபாவை நீங்கள் பிரிந்துதான் ஆகவேண்டும். என்னை மன்னித்துவிடுங்கள். என்றார்.

***




இடைவிடா மழை
குடையிலா நானும்
கடையோரம் நனைய
நடைபாதை வழியே
சடைவாசம் பரவ
இடை புடவைக்கு
விடை கொடுக்க
குடை கொண்டு
பெடை அன்னம்
நடை வென்று வந்தவளை,
கடை விழியால் நோக்க
படையொன்று எனைத்தாக்க
மடை மேவும் வெள்ளமென
புடை சூழ்ந்த காதலெழ
குடை பிடித்தாள் மழைக்கு
கொடையானாள் அவள் எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாநாமர் வேதவசனம் எழுதிக்கொண்டிருந்தார்...

—கொட்டிய ஆரன்—

மழைத் துளிகளின் தோலில்
குளிர் பூசியவன் யாரெனக் கேட்டன
ஓநாய்கள்..
ஆடுகள் மகிழ்ச்சியில்
துள்ளினவென்று..

அவர் எழுத எழுத
கால்கள் முளைத்த எழுத்துகள்
காடுகள் எங்கணும்
விரவிப் போயின... இயற்கையை
மூடி – அந்த எழுத்துகள்
கிளைத்துச் சடைத்தன..

அப்போதுதான்
கோணேச மலையினை
உடைத்துக் கொண்டு வெளியே
வந்தான் மகாசேனன்.
அவனின் ஒய்யாரமோ...
இராவணனின் முதுகிலிருக்க
இவனோ... கும்பகர்ணனாகிக்
கிடந்தான்...

குளக்கோட்டன்
"அம்மான் கண்" என்றபடி
நிற்க... அக்கரபோதி...
அவன் மீதே அணையைக்
கட்டினான்... கிழவர்களோ...
வெள்ளைப் புரவிமேல்
கல்கி வருவானென – இன்னமும்
காத்துக் கொண்டிருந்தார்கள்..
அவர்கள்... சிவபுராணம் படித்து
இதுவரை எந்தச் சவத்தையும்
எழுப்பியதுமில்லை... இருப்பினும்
ஓதிக்கொண்டுதான் இருந்தனர்...

நிறங்கள் பொய்சொல்லியதால்
இறக்கைகளை உதிர்த்துவிட்டு
பறவைகள் – தாம் பரிநிர்வாணம்
அடைந்ததாய்க் கூறின..

ஆனால் கால்களையும்
அலகுகளையும் அவை
உடைத்துவிட மறந்திருந்தன...
இன்னும்... அவைகளின்
குரலும் எச்சங்களும்
அவைகளறியாமலேயோ
அவைகளை
அடையாளங்காட்டின...

நேற்று சீனியைப் பிழிந்தது
தந்த கரும்புச் சக்கைகள்
இன்று மதுபானம் செய்தன. அந்த
மகாநாமரின் பைபிளின் மீது
புத்தனின் இரத்தம்
சொட்டியபடி இருந்தது...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட படைப்பாளி

# கனகசூரியம் யோகானந்தன்



திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள சம்பூரில் திரு.கனகசூரியம் யோகானந்தம் அவர்கள் 1961.11.12 ஆம் நாள் பிறந்தார்.

**கல்வி**

தனது தொடக்கக் கல்வியை சம்பூர் மகா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்திலும் மூதூர் மத்திய கல்லூரியிலும் கற்று பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்து 1983 ஆம் ஆண்டு கலைப் பட்டதாரியானார்.

**கல்விப்பணி**

1985 ஆம் ஆண்டு தராதரப் பத்திரமுள்ள ஆசிரியராக தனது முதல் நியமனத்தினை நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அல்லித்தோட்டம் கெனில்வேர்த்த இல:02 தமிழ் வித்தியாலயத்தில் தொடங்கினார். நான்கு ஆண்டுகள் பணியின் பின்னர் தனது சொந்த ஊரான சம்பூருக்கு 1989 இல் வந்து சம்பூர் மகா வித்தியாலயத்தில் கற்பித்தார். 1995 இல் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராக பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பாடம் கற்பித்தார். 1995 இல் ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்குக் கற்பித்தார். 2004 இல் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் பள்ளி முதல்வரானார். 2010 ஆம் ஆண்டு உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் துணை முதல்வராகப் பொறுப்பேற்றார். 2011 இல் இலிங்கநகர் கோணலிங்க மகா வித்தியாலயத்தில் பள்ளி முதல்வராகவும் 2014 இல் தம்பலகமம் ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் பள்ளி முதல்வராகவும் 2019 இல் சீனன்குடா தமிழ் வித்தியாலயத்தில் பள்ளிமுதல்வராகவும் பணியாற்றி 2021.11.12 ஆம் நாள் கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கியப்பணி**

பள்ளியில் படிக்கும் காலத்தில் துயர்பகிரும் கவிதைகள் மூலமாக இலக்கியத் துறையில் காலடி வைத்தார் திரு கனகசூரியம் யோகானந்தன் அவர்கள். சம்பூர் பத்திரகாளி கோயில் குடமுழுக்கு நினைவாக 1987 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நினைவு மலரில் எழுதிய கவிதையுடன் எழுத்துத்துறையில் நுழைந்தார். தர்க்கீகம் இதழில் கவிதைகள் எழுதி தனது கவிதைகளை வெளியுலகிற்குக் கொண்டு வந்தார்.

ஆமரர் பு.செல்லக்குட்டி அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'அருவி' எனும் கையெழுத்து இதழில் சிறுகதைகள் எழுதினார். 1991 இல் 'விடியல்' எனும் கையெழுத்து இதழில் ஆசிரியராக இலக்கியப் பணியாற்றினார். தாகம் கலை இலக்கிய வட்டத்தினால் 2003 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களுக்கான பயிற்சி ஏடு முதலாவது அச்சுப் பொத்தகமாக வெ ளியிடப்பட்டது. தொடர்ந்து 'தமிழ் மொழியும் இலக்கியமும்' எனும் தரம் 10, 11 மாணவர்களுக்கான நூலினை வெளியிட்டார். தொடர்ந்து உயர்தர மாணவர்களுக்கான தமிழ் வினா விடைப் புத்தகத்தினையும் எழுதி வெளியிட்டார். 2003 ஆம் ஆண்டு உயர்தரப் பாடத்திட்டத்திலுள்ள 'நாகம்மாள்' மீள் வாசிப்பினை நூலாக்கியிருந்தார். 2005 ஆம் ஆண்டு 'உண்மை என்றும் உயிர் பெறும்' எனும் கவிதைத் தொகுப்பினை முதல் இலக்கிய நூலாக வெளியிட்டார். இந்நூல் 2006 ஆம் ஆண்டில் தேசிய சாகித்திய மண்டல விருது பெற்றது. 2006 ஆம் ஆண்டு 'மழலைக் கோர் பாட்டு' எனும் சிறுவர் பாடல் நூலினை வெளியிட்டார். 2014 இல் 'என் மன வானில்' எனும் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டார் 2018 ஆம் ஆண்டு 'நதியில்லா ஓடம்' எனும் கவிதை நூலினை வெளியிட்டார். இந்நூல் உலக அளவில் 2019 ஆம் ஆண்டு 'பிரமிள்' விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

**அமைப்புகளில் ஈடுபாடு**

உலகத்தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் இலங்கைக்கான துணைத்தலைவராகவும் தமிழமுதம் கலை வட்டத்தின் ஆலோசகராகவும் வளரி பன்னாட்டு கவிதை பண்பாட்டு மையத்தின் சர்வதேச ஆலோசகராகவும் சம்பூர் தமிழ் மன்றத்தின் ஆலோசகராகவும் செயற்படுகிறார்.
1992 இல் திருமணமான திரு க.யோகானந்தன் அவர்கள் ஒரு மகளுக்கும் இரண்டு மனக்களுக்கும் தந்தையாகவுள்ளார். திரு கனகசூரியம் யோகானந்தன் அவர்களை 'நம்மட முற்றம்' வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர் இடப்பெயர்வின் சுவடாக எஞ்சி நிற்கும்
# "அடையாளமற்றிருத்தல்"

"இருத்தலுக்கான நிச்சயத்தை
உணரும் வரை
நிலைப்பு என்பது ஊசலாடியபடியே
காலத்தை கெஞ்சுகிறது"
(நிலைத்திருத்தலின் பாடுகள்- அடையாளமற்றிருத்தல் பக்கம் 91)

கவிஞர் சம்பூர் வதனரூபன் அவர்களின் "அடையாளமற்றிருத்தல்" தொகுதிக்கான குறிப்புரை ஒன்றினை வரையத்தொடங்குகையில் தட்டுப்பட்ட வரிகளே இவை. போர்க் காலமொன்றின் விகசிப்புக்களை போர் முடிநது தசாப்தம் கடந்த பின்னரும் மீள்வாசிப்பினை கோரும் புலங்களை தேடிய லைகையில் மீண்டும் பூதமாகி எழுந்து வருகின்றன இருத்தலும் நிலைத்தலும். மனித இனத்தின் வரலாறு முழுவதும் நீள்கின்ற போர்களும், வன்முறைகளும், வாதங்களும் இருத்தல் மற்றும் நிலைத்தல் என்பவற்றிலேயே வேரோடி கிழங்குகளாகின்றன என்பது ஊரறிந்த இரகசியம் மட்டுமல்ல.
பொதுவெளியில் வெறுமனே கவிதை என்றோ அல்லது இலக்கிய வடிவமொன்றாகவோ காகிதங்களில் கடந்து செல்லக்கூடியவொன்றை இத்தனை பீடிகையுடன் நான் முன்னகர்த்தி செல்லக்கூடிய இந்த கணத்தினை இவ்வாறு காண்கிறேன்.



"சாளரங்களால் பிரிக்கப்பட்ட
எனக்கிடையிலான
அதன் வெளி
நீண்ட அன்னியத்தை மேலும் விரிக்கிறது" (வாழ்க்கையின் வெளி-பக்.90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கவிதைதொகுப்பின் வாசிப்பின் பின் நானடைந்த பட்டறிவு இவ்வாறாகவேயிருக்கிறது. பொதுவாக வாசிப்பின் பின் பட்டறிவுகள் பின்வருமாறானதாக அமையலாம்.

1. பிரதி தன்னுள்ளே வாசகனை ஈர்த்து கொள்ளல்.
2. பிரதி கிளர்த்தும் மொழி வழியேயான பட்டறிவுகளினூடே வாசகனும் பிரதியும் வெவ்வேறாதல்.

இங்கே நான் கூறிய முதலாவது வகைமை உணர்வு ரீதியானதும் மற்றும் பிரதியின்பம் என்ற வகைமைக்குள் அடங்குவதாகும். இதன் மறுதலையான எடுப்பாகவே எனது இரண்டாவது சுட்டல் அமைகிறது.

பிரதிக்குள் பயணிக்கும் வாசகனை அவனது விடுதலை நகர்வினை தடைசெய்யாது மேலும் மேலும் புனைவுக்குள்ளாக சிந்தனைகளை புகட்டி அவனை பிரதியிலிருந்து வெளியேற்றி விடுதல். இதனையே நான் பிரதிக்கும் எனக்குமான அன்னியமாக காண்கிறேன். வதனரூபனின் கவிதைகள் மீதான வாசிப்பின் மொத்த பட்டறிவும் இந்த அன்னியமாதல் சார்ந்ததே. தனது வாழ்வியல் காட்சிகளூாடே போர்க்காலத்தை வாசிப்பு செய்யும் வதனரூபன் அதனை தனது மொழியாடல்களினூடாக புனைவுக்குள் கடத்தும் தருணங்களில் ஒன்று இவ்விதமாகிறது.

"துச்சாதனர்கள் பார்த்திருக்க
சகுனிகளிடம் துகில்களை களைந்தெறிந்து
கண்ணனற்றுத் திரிகின்றனர் திரௌபதைகள்"
(கண்ணனற்றுத் திரிதல்-பக்.87)

தொன்மங்களை மீள்வாசிப்பு செய்தலானது காலத்துக்கு காலம் நமது கவிதைகளில் நிகழ்ந்தவாறே இருக்கின்றது. சகுனியை மீள்வாசிப்பு செய்யும் இந்த கவிதை நிகழாத பகடையாட்டத்தில் துச்சாதனர்களை வெளியகற்றி விடுகிறது. களைந்தெறிதல் என்பது ஒருவகையான சரணடைதலே. காப்பாற்றுவதற்கான தேவை நலிந்த காலத்தே கூவுதல்களும் இல்லை கண்ணனுமில்லை. இங்கு கண்ணனை ஆடைகள் என்று வாசிப்பு செய்கையில் கவிதை தரும் பட்டறிவு வேறாகிறது. போரின் வலி குறித்து ஓலமிடாது போரினுள்ளே வாழ்ந்து அதன் இயல்பினை வாழ்வின் மீதான அதன் இறுக்கமான நெரிப்பினை இயல்பாக பேசிச் செல்பவை இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகள். இவரது கவிதைக்குள் வரும் கவிதைசொல்லி சில கவிதைகளில் சுட்டும் பொருள் எதுவோ அதுவாகி பின் அதுவற்றதாகி விடும் விந்தையி-னையும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக அந்நியமாகும் நிலம் கவிதையில் வரும் கவிதைசொல்லியின் மொழிதல்களினூடே புலப்படுவது இதுவே. நிலம் என தலைப்பினை இட்டுவிட்டு மண்ணை பற்றி பேசுகிறார் கவிதைசொல்லி. நிலமும் மண்ணும் ஒன்றேயாயினும் அவற்றிடையேயான நுண்ணிய வேறுபாடுகளையும் அத்துடன் கவிதைசொல்லியே நிலமாயும் மண்ணாயும் மனிதனாயும் மாறி மாறிப் பயணம் செய்கின்றனர் கவிதையினுள்ளே.

இவரது கவிதைகள் நாய்கள் குறித்து அதிகம் அக்கறை கொள்வதை காண முடிகிறது. நாய்கள் குறியீடாகவன்றி நேரடியாக அதன் இயல்பினூ டாகவே கவிதையில் காட்சியாகுகையில் அதன் வீச்சம் இன்னோர் பரி-ணாமத்தை கவிதைக்கு ஈகின்றது.

"என்னூர் நாய்களுக்கே
என் இரத்தமோப்பம் காட்டி
அருவருப்பு ஊட்டியிருப்பதால்
அவைகளில் சில
என்னை வெறித்து வெறித்து பார்க்கும்"

(அந்நியமாகும் நிலம்-பக்.83)

நாய்கள் குறித்த பொதுப்பார்வையான எலும்பு துண்டுக்கு வாலாட்டுதல்,க-ாவல் மற்றும் நன்றியுணர்வு என்பவற்றை தாண்டி ஒரு மிருகமாக அதன் இயல்புணர்வுடன் இந்த வரிகளில் நாயை நாயாக அலைய விடுதலின் சாத்தியங்களை இந்த வரிகளினூடே தருகிறார் கவிதைசொல்லி. இது மனிதபண்புகளை அஃறிணைகளின் மீது சுமத்துவதற்கு எதிரான வன்முறை-றயினை களைந்து விடுவதாக கூறலாம்.

பொதுவாக போர் குறித்து எழுதப்பட்ட அனேகமான தமிழ் கவிதைகளின் பொதுப்போக்கு சிங்கள இனவாத அரசு குறித்த முறையிடல்களாகவும் ஓலங்களாகவுமே அமைகின்றன. ஆனால் போரென்பது இலட்சியப்பெ-ாருளாக இருக்கும் உண்மையல்ல.போரை போருக்குள்ளிருந்து பார்ப்பே-ாருக்கே அதன் கனதியான பரிணாமங்கள் புரிவதுடன் இதன் பின்னணியி-லேயே பாதிக்கப்பட்ட தரப்பும் தன்மீதான தன்னாய்வு அவாவும் மனநிலை மேலெழுகிறது. இவ்வாறு தன்னாய்வு அவாவும் வரிகளையும் இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளில் சில இடங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. இது இந்த தொகுப்பினை கவனத்திற்குள்ளாக்குகிறது.

"அழித்தோம். அழிந்தோம்.
விடுதலை என்பதற்கு
விளக்கம் மட்டும் கிடைக்கவில்லை.
சந்தனப்பேழையுள் நீ
விதைக்கப்பட்டதற்காய்
கல்லறை மேடுகள் தான்
மீதமாகும் சான்றுகளா?"
(இப்படிக்கு: தாய்நிலமின்றிய அண்ணன்-பக்.77)

விடுதலை என்பது சாதாரண மக்களின் பார்வையில் எவ்வாறான கருத்-தினை கொண்டிருந்தது என்பதற்கான அடையாளத்தினை இந்த வரிகள் இயம்புகின்றன. அதிகாரத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விடுதலை என்ற கருத்தியலிலும் கூட ஈற்று உற்பத்தி "அழித்தோம் அழிந்தோமாக" போனமை காலத்தின் மறுக்க முடியாத செய்தியாகிறது.

"ஆயுதங்களோடு புறப்பட்டு போனோம்
எங்களுக்கான படுகுழிகளை
வெட்டிக்கொள்தற்காகவும்"
(நிரந்தரமில்லாத இருப்போடு எச்சில் உமிழும் எனது சுதந்திரம்-பக்.60)

போருள்ளிருந்து வாழ்ந்து பார்த்தோரின் உள்பார்வைகளை பகட்டற்று பதிவு செய்கிறார் இங்ஙனமாக. இலங்கையில் இனப்போரில் ஈடுபட்ட இனங்களின் வாழ்வில் மரங்கள் ஒரு குறியீடாகவும் ஆன்மிக பொருள் மிகுந்ததாகவும் இருக்கின்றன. வெறுமனே நிழல் தருதலையும் தாண்டி இந்த மரங்களின் பின்னாலுள்ள அரசியலை வாசிப்பு செய்ய வேண்டியுள்ளது. அந்த வகையில் இந்தத் தொகுதியில் முக்கிய கவிதையாக அமைகிறது "புத்தனின் பெயரால் கொல்லப்பட்ட மரங்கள்".

மரம் என்பதையும் தாண்டி அரசமரம் என்பது தமிழர் மனங்களில் ஓர் ஆக்கிரமிப்புச் சின்னமாக மாறிப்போனமை மற்றும் அரசமரத்தை ஒட்டி நிகழ்ந்த சம்பவங்கள் இந்த கவிதைக்கான தலைப்பு மற்றும் கருப் பொருளில் தாக்கத்தை செலுத்துகின்றது. ஆனால் மரங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியில் நிகழ்த்தப்படுகின்ற அரசியலில் நிகழ சாத்தியம் மிகுந்த ஊகம் ஒன்றி னையும் கவிதையின் ஈற்றுப்பகுதி வாண்மையாக பதிவு செய்கின்றது.

"புத்தரிருக்க புண்ணியம் செய்த மரம்
பாவம்
தமிழன் பூமியில் அச்சுறுத்தலுக்குள்ளானது.
இனி...
பிள்ளையாரை வைத்தார்கள் என்று
எவரும் வேம்புகளையும் வெட்டி எறிவார்கள்"

(புத்தனின் பெயரால் கொல்லப்பட்ட மரங்கள்-பக்.68)

சற்றே நிதானித்து கடக்க வேண்டிய வரிகள் இவை. இந்துவுக்கு வேம்பும் பௌத்தத்துக்கு அரசும் விதிக்கப்பட்ட மரங்கள். ஆனால் பிள்ளையாரும் புத்தரும் அரசமரத்தை பங்கு போடும் தெய்வங்கள். வேம்பு என்பது வீரம் மிகுந்த அம்மனுக்கானது. இந்த மரத்தின் கீழ் வினாயகரை வைக்க வேண்டிய அவசியத்தை நோக்குகையில் அரச மரங்கள் போரியல் நிலத்தில் வீழ்த்தப்பட்ட நிகழ்வும் அனைத்து தெய்வங்கட்குமான பொது மரமாக வேம்பு நிலைப்பட்டதும் மரங்களின் அரசியல் கூறும் செய்தியாகிறது.

பொதுவாக போரின் முதற்பலியாக அமைவது ஊடகங்களே.சுதந்திரமாக செய்திகள் வெளிவரக்கூடாது என்பதில் குறியாகவிருக்கும் அதிகாரங்களின் கைகள் ஊடகங்கள் மீது பாய்வது உலக வழமை. இந்த வகையில் ஊடகங்கள் மீதான வன்முறையினை பதிவு செய்யும் "குமிழ் உடைந்த பேனா" கவிதையின் முடிவு இவ்வாறு அமைகின்றது.

"எங்கோ ஒரு திசையில்
சில வேட்டொலிகள்
எல்லோருக்கும் நெஞ்சுக்குள் கனத்தது
ஞாபகத்திற்கு வந்தது
எப்போதும் அவர் கையில் பேனா இருக்கும்"

(குமிழ் உடைந்த பேனா-பக்.76)

விடுதலைக்கான போர் என்பது முற்றுகைக்குள்ளிலிருந்தே நிகழ்கிறது. ஆனால் இந்த முற்றுகைக்குள்ளும் விடுதலை என்பது இருக்கிறது என்பது புதியன கூறுவனவல்ல. ஆழ்ந்து சிந்திக்கையில் உண்பதற்கும், உறங்குவதற்கும் புணர்வதற்குமான விடுதலையை இந்த போர் நிலம் தடை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை என்பதை வதனரூபன் இவ்வாறு பதிவு செய்கிறார்.

"எனது நில அடைப்பின்
படலை பிரித்து நுழைகையில்
வேலி கடக்கையில்
வீட்டின் கதவு ஜன்னல் திறந்து
காற்று நுகர்வதில்
முற்றத்து வெளியில் மல்லாந்து கிடப்பதில்
நினைத்த பொழுதில் எச்சில்
உமிழ்வதில்
உணர்வேன்
எனது சுதந்திரத்தை"

(நிரந்தரமில்லாத இருப்போடு எச்சில் உமிழும் எனது சுதந்திரம்-பக்.61)
பொதுவெளி விடுதலை மறுக்கப்பட்டிருப்பினும் சில அசாதாரண நிகழ்வு-கள் தவிர்த்து "வளவுக்குள் வாழ்வதற்கும்" "எச்சில் உமிழ்வதற்கும்" சுதந்திரம் இருந்ததென்பது சுதந்திரம் குறித்த எளிய நிலையாக "கறு-ப்பு நகைச்சுவையாக" இந்த வரிகளினூடே பதிவு செய்கிறார் கவிஞர். இதனை போருக்குள் வாழ்தல் என்பதை விடவும் போரை வாழ்தல் எனக்கூறினால் அது மிகையன்று.

காதலை பாடாது கவிதைத்தொகுதிகள் கவிதைகளை கடப்பது அரிது. அந்த வகையில் இந்த முழுத்தொகுதியினதும் ஒரேயொரு காதல் கவிதையாக அமைகிறது" எனக்கு பிடித்த வில்லுக்குளமும் வெண் தா-மரைப் பூக்களும்" கவிதை. ,துவும் கூட காலத்தின் விகசிப்பினை தன-க்குள் தாங்கியபடி அமைகிறது.

"உனக்குள்ளும் காதல் இல்லை
ஊரில் கூட நாம் இல்லை"

(எனக்கு பிடித்த வில்லுக்குளமும் வெண்தாமரைப் பூக்களும்-பக்.34)
இந்த தொகுப்பின் கவிதைகள் அனைத்துமே மக்களின் குரலாக ஒலிப்பவையே தவிர உணர்ச்சி பெருகி தமிழ்த்தேசியம் குறித்து அலறுப வையல்ல என்பது இந்த வாசிப்பினூடே நான் அறிந்தது. இந்த மக்களின் வாக்குமூலம் இவ்வாறு அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லோருக்கும் தெரியும்
இங்கு இருப்பவைகளையும்
இன்று நடப்பவைகளையும்
அவர்களும் இவர்களுமே உருவாக்கினார்கள்"
(அப்பாவிகளின் சார்பாக-பக்.54)

இந்த வரிகளின் முடிவில் என்று என்ற சொல் தவிர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறு "என்று" என்பது வருமாயின் இந்த வரிகள் ஊகமாகிவிடும் ஆபத்துக்களும் உண்டு. ஆனால் உண்மையின் விளம்பலாக வரிகளை மாற்றுவதற்காக கவிஞர் மேற்கொண்ட உத்தி இதுவென நாம் கூறலாம். இவ்வாறு பல உத்திகளை இந்தத் தொகுப்பு முழுவதிலும் காணக்கூடிய-தாக இருக்கிறது. இந்தத் தொகுதியின் கவிதைகள் வார்த்தைச் சோ-டணைகளின்றி நீண்ட வாக்கியங்களாக அமைந்து காணப்படுகின்றன. இந்த தொகுதிக்குத் தேவையான எடுத்துரைப்பு முறையும் இதுவே. ஏனெ-னில் இங்கு கவி தையை புனைவதை விடவும் உரைப்பதே தேவையா-கிறது.

தொகுதியை வாசித்து முடித்ததும் கவிதை என்பது மூளை மற்றும் இதயம் என்பவற்றையும் கடந்து நிலைத்து நிற்கும் ஒன்று என்றே என்னால் கூறக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில் இந்தக் கவிதைகள் தம்மை நிகழ்த்தி காட்டுகின்றன.

**-லலிதகோபன் .தி-**

**நம்மட முற்றத்தில் படைப்பாளிகளின் படைப்புகள்**

சிறுகதை, கவிதை, கட்டுரை, நகைச்சுவை, பயன்தருமதகவல்கள், ஓவியங்கள் (கறுப்பு/வெள்ளை) போன்ற படைப்புகளை படைப்பாளிகளிட மிருந்து எதிர்பார்க் கிறோம். படைப்புகள் அனைத்தும் பிறமொழி கலவாது இருத்தல் வேண்டும். பிறமொழி கலப்பின் அச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்லினை இடுவதற்கு நம்மட முற்றத்தின் ஆசிரியர் குழுவிற்கு உரித்து உண்டு. ஆக்கங்கள் பாமினி (Bamini) அல்லது Unicode இல் இருத்தல் வேண்டும். எழுத்துப் பிரதிகள் நிராகரிக்கப்படும்.


thiruk69@gmail.com எனும் மின்னஞ்சலுக்கோ அல்லது 0772908990 எனும் புலனத்திற்கோ (WhatsApp) அனுப்பி வைக்கவும்.

*-முதன்மை ஆசிரியர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியப்பெரு நிலப்பரப்பில் மீண்டும் அரியதொரு தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிப்பு !



"சோழராட்சி முடிவுற்ற பின்னர் மூவேந்வேளான் ஏற்பாட்டில் வேளைக் காரர் பிரிவைச் சேர்ந்த 'மதிமான் பஞ்சரத் தெரிந்த வில்லிகள்' என்ற படைப் பிரிவு வீரர்கள் இங்கிருந்த கோயிலிற்கு மடம், கேணி, சிறுகுளம், கிணறு ஆகிய வற்றினை அமைப்பித்தனர் என்ற செய்தியை கூறுவதாக இக்கல்வெட்டு காணப்படுகின்றது -- பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம்"

வவுனியா வடக்கு பெரியமடுப் பகுதியைச் சேர்ந்த திருவாளர்களான த.சசி-கரன், ப.செந்தூரன், வி.ஜெகதீஸ்வரன், இ.நகுலேஸ்வரன் மற்றும் வ.கிந்துஜன் ஆகியோர் அண்மையில் தமது நெற்காணிகளுக்கு காட்டு வழியூடாக சென்று வரும்போது அக்காட்டில் அழிவடைந்த சிறியகேணிக்கு அருகிலுள்ள கற்தூண்ஒன்றை அடையாளம் கண்டனர். அக்கற்தூணில் புராதன எழுத்துக்கள் சில இருப்பதை அவதானித்த அவர்கள் அதுபற்றிய புகைப்படத்தை எமது தொல்லியல் பட்டதாரிகளான சுதர்சன் தம்பதியி-னருக்கு அனுப்பிவைத்தனர். அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட அவர்கள் அப்புகைப்படத்தை எனக்கு அனுப்பி வைத்தனர். அப்புகை-ப்படத்தில் உள்ள எழுத்துக்கள் ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்குரியவை என்பதை உறுதிப்படுத்திய நாம் தொல் லியற் திணைக்களப் பணிப்பாளர்நாயகத்தின் அனுமதியுடன், பிராந்திய தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான திரு.வ.மணி-மாறன் மற்றும் திரு.பா.கபிலன் ஆகியோருடன் பெரியமடு பிரதேசத்திற்கு சென்றிருந்தோம். அங்கு சென்றபேது கல்வெட்டுகளை அடையாளம் கண்ட அன்பர்களும், திரு.சுதர்சன் குடும்பத்தினரும் கல்வெட்டு காணப்பட்ட இடத்திற்குச் செல்வதற்கான ஒழுங்குகளையும் செய்துதந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஈழத்து வரலாறும் தொல்லியலும்*

இக்கல்வெட்டு வவுனியா வடக்கில் நெடுங்கேணியின் தென்னெல்லையில் உள்ள பெரியமடு பிரதேசத்தின் 'நயினாமடு' கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட 'கோடலிபறிச்சான்' என்ற காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. இவ்விடத்தை இங்குள்ள சிறிய நடை
பாதையில் இருந்து அடர்ந்தகாடுகள் ஊடாக நீண்டநேரக் கால்நடைப் பயணத்தின் பின்னரே அடையமுடிந்தது. இவ்விடத்திற்கு மிக அருகில் பாழடைந்த சிறிய கேணியொன்று காணப்படுகின்றது. அக்கேணி யைச் சுற்றி பொழிந்த வெள்ளைக்கருங்கற் தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை இங்கிருக்கும் கேணியின் தொன்மையையும், அதன் வரலா-ற்று முக்கியத்துவத்தையும் புலப்படுத்துவதாக இருந்தது. இவ்விடத்-தின் சுற்றாடலில் பாழடைந்த சில குளங்களும், சிறிய மண்மேடுகளும், அடர்ந்த காட்டுமரங்களுடன் சில புளியமரங்களும், இலுப்பைமரங்களும் காணப்படுகின்றன. அவற்றிடையே அரிதாக சில செங்கட்டிகளும், சில-வகை மட்பாண்ட ஓடுகளும் காணப்பட்டன. இவை முன்பொரு காலத்தில் இவ்விடங்களில் செறிவான மக்கள்குடியிருப்புகள் இருந்ததற்குச் சான்றாகும். ஆகவே இவ்வாதாரங்களின் பின்னணியிலேயே இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டியுள்ளது.

இக்கல்வெட்டு ஒரே வெள்ளைக்கருங்கல்லில் பீடத்துடன் இணைந்ததா-கச் செதுக்கப்பட்டு இங்கிருக்கும் கேணிக்கு அருகில் நாட்டப்பட்டிருந்-துள்ளது. ஆயினும் தற்போது அக்கல்வெட்டுப்பாகம் மூன்று துண்டங்க-ளாக உடைந்து கேணிக்கு அருகிலேயே காணப்படுகின்றன. அவற்றுள் 70 செ.மீ உயரமும், 24 செ.மீ அகலமும் கொண்ட கல்வெட்டின் பீடம்
தனித்துண்டாகக் காணப்படுகின்றது. இதற்கு அருகில் 164 செ.மீ உயரமும், 20 செ.மீ அகலும் கொண்ட எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள கல்லின் பா-கமும் இன்னொரு துண்டமாகக் காணப்படுகின்றது. இக்கல்வெட்டில் மேற் பாகத்தில் மங்கலச் சொல்லுடன் தொடங்கியிருக்க வேண்டிய இரண்டு அல்லது மூன்று வரிகள் கொண்ட கல்வெட்டின் பாகம் உடைந்த அல்லது உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது. ஆயினும் அப்பாகத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. 164 செ.மீ உயரம் கொண்ட கல்லின் நான்கு பக்கங்களில் ஏறத்தாழ 63 வரிகளில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படு கின்றன. 16 வரிகள் கொண்ட நான்காவது பக்கச் சாசனத்தின் (எழுத்துப் பொறிப்புகளில்) சில வரிகளின் எழுத்துக்கள் தேய்வடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணப்படுவதால் அவற்றைச் சரியாக வாசிக்க முடியவில்லை. அவ்வரிகளை மீண்டும் முறையாகப் படியெடுக்கும் போது இக்கல்வெட்டின் நான்கு பக்க சாசனங்களின் வாசிப்பும் முழுமை பெறலாம்.

இக்கல்வெட்டை அடர்ந்த காட்டினுள் மழையும், இருட்டும் தொடர்ந்த நிலையில் யானைகள் வந்துவிடுமோ என்ற அச்சத்துடன் குறுகிய நேரத்திலேயே படியெடுக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் இக்கல்வெட்டை அடையாளம்காட்ட உதவி யவர்களின் கடின உழைப்பினாலும், அவர்கள் கொடுத்த தன்னம்பிக்கை யாலும் எமது தொல்லியல் பட்டதாரிகளின் முழுமையான பங்களிப்புடன் இக்கல்வெட்டைப் படியெடுத்து முடிக்கப்பட்டமை இவ்விடத்தில் சிறப்பாக நினைவுகூரத்தக்கது. இவ்வாறு படியெடுக்கப்பட்டவற்றின் புகைப்படங்களை படிப்பதற்கும், அதுபற்றி கருத்துக்களை அறிவதற்கும் வெளிநாடுகளில் வசிக்கும் எனது ஆசிரியர்களான பேராசி ரியர் கா. இந் திரபாலா, பேராசி ரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி, கலா நிதி. இராஜ கோபால் ஆகியோருக்கு அனுப்பிவைத்தேன்.

அக்கல்வெட்டு படிகளை பேராசிரியர் வை.சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி ஆகியேயார் தனித்தனியாகப் படித்து எனக்கு அனுப்பி வைத்தனர். அவர்களின் வாசிப்பையிட்டு பேராசிரியர் இந்திரபாலா அவர்களும் தனது திருப்தியை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்தியிருந்தார். அவர்களின் வாசிப்பின் முக்கிய அம்சங்களை இவ்விடத்தில் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.


ஜெயபாகு தேவரது பன்னிரண்டாவது ஆட்சியாண்டின் போது வடகரை நாட்டு மூன்று கை திரு வேளைக்காறர் பிரிவைச் சேர்ந்த மதிமான் பஞ்சரத் தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் இங்கிருந்த கோயிலின் அம்பலம் (மடம்) பொகொறோணி (சிறுகுளம்) கிணறு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர் என்பதும், இவற்றைச் செய்தவன் மூவேந்தவேளான் என்ற பட்டம் கொண்ட அதிகாரி என்பதும் தெரியவருகின்றது. மேலும் இக்கல்வெட்டின் இரண்டாம், மூன்றாம் பக்கங்களில் இப்படைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவில் இருந்த படைவீரர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒரே பெயர் பல படைவீரர்களுக்குரிய பெயர்களாகக் காணப்படுகின்றது. அப்பெயர்களாக:

1 .இர....
2. .க்கன்
3. இரக்கன்
4. பெரியான்
5. இரக்கன்
6. புத்தை
7. நெட்டுர்
8. ஆதித்தந்
9. கொடி
10. சோழன்
11. சாத்தன்
12. கண்டந்
13. கூத்தந்
14. ஏறன் சு
15. ந்தன்
16. சாத்தன்
17. சாத்தி
18. சாத்தன்
19. அம்மணி
20. சாத்தன்
21. இரக்கந்
22. கண்டந்
23. அம்பலம்
24. சோழன் அ
25. ழுதி



ஆகிய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் இடைக் கால வடஇலங்கையின் வரலாறுபொறுத்தும், தமிழர் வரலாறு பொறுத்தும் எழும் கேள்விகளுக்கு விடைகூறும் புதிய செய்திகளைத் தருவதாக இருக்கும். இக்கல்வெட்டில் வரும் ஜெயபாகு என்ற பெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவை இராசதானி காலத்தில் மூன்று சிங்கள மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட ஆறு கல்வெட்டுகள் இதுவரை கிடைத்துள்ளன. இதேவேளை ஜெயபாகு என்ற பெயர் கொண்ட ஒருவனை பாளி, சிங்கள இலக்கியங்கள் தமிழ் மன்னன், தமிழ்ச் சிற்றரசன், பொல-நறுவையில் கலிங்கமாகனுடன் இணைந்து ஆட்சிபுரிந்த துணையரசன் எனவும், அவனிடம் நாற்பதாயிரம் படைவீரர்கள் இருந்ததாகவும் கூறுகின்றன. ஆயினும் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறும் ஜெயபாகுவும் கல்வெட்டில் வரும் ஜெயபாகு மன்னனும் ஒருவனா என்பது கல்வெட்டின் காலத்தைச் சரிவர வரையறுத்ததன் பின்னரே கூறமுடியும். இக்கல்வெட்டில் வடகரைநாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. சிங்கள கல்வெட்டுகளிலும், பாளி, சிங்கள இலக்கியங்களிலும் வடஇலங்கை வடகர( வடகரை), படகர (ப.ஃ.வ) என அழைக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழக கல்வெட்டுக்களில் வடகரைநாடு பற்றி பல குறிப்புகள் காணப்படுகின்றன. இதனால் இக்-கல்வெட்டில் வரும் வடகரைநாடு என்பது எந்தநாட்டைக் குறிக்கின்றதெ-தன்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

இக்கல்வெட்டு மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் பற்றிக் கூறுகின்றது. மதிமான் பஞ்சரன் பற்றிய சில சான்றுகள் இடைக்கால இலங்கைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆயினும் பேராசிரியர் சுப்பராயலு அவர்கள் இப்பெயர் கொண்ட படைப்பிரிவு தமிழகத்தில் இருந்ததற்கு சான்றுகள் இல்லையெனக் கூறுகின்றார். இதனால் இப்படைப்பிரிவை இலங்கைக்கு உரியதாகப் பார்க்க இடமுண்டு. இதை எதிர்கால ஆய்வுகள் மூலம் மேலும் உறுதிப்படுத்தவேண்டும். இன்று காடாகக்காணப்படும் கோடலிபறிச்சான் இற்றைக்கு 1000 அண்டகளுக்கு முன்னரும் காடாக இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. ஏனெனில் இக்-கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் கே-ாயில் மடம், சிறுகுளம், கிணறு இருந்தன என்ற புதிய செய்தியைத் தருகின்றது. இவற்றில் இருந்து இங்கு இந்து ஆலயம் இருந்துள்ளமை உறு-தியாகத் தெரிகின்றது. இக்கூற்றைத் தற்போது அழிவடைந்து காணப்படும் கேணியும், அதைச்சுற்றி பரவலாகக் காணப்படும் பொழிந்த வெள்ளைக் கருங்கற் தூண்களும், அருகிலே காணப்படும் உயர்ந்த மண்மேடுகளும் உறுதிசெய்கின்றன. அவ்விடங்களில் அகழ்வாய்வுகள் செய்யப்படுமானால் அந்த உண்மை மேலும் உறுதி செய்யப்படலாம்.

இங்கிருந்த ஆலயமடம், சிறுகுளம், கிணறு என்பன தமிழ்ப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களுக்கு ஜீவிதமாக வழங்கப்பட்டமையும், அவற்றைப் பாதுகாக் கும் பொறுப்பை அப்படைவீரர்கள் ஏற்றுக்கொண்டமை பற்றியும்
இக்கல்வெட்டுக் கூறுவது அதிமுக்கிய வரலாற்றுச் செய்தியாக உள்ளது. இவற்றில் இருந்து சோழர்ஆட்சியின் முடிவோடு வடஇலங்கை பொலநறு-வையின் பண்பாட்டு வட்டத்தில் இருந்து படிப்படியாக விடுபட்டு வருவதை இச்செய்தி உணர்த்துவதாக உள்ளது. அண்மைக்காலங்களில் இலங்கைத் தமிழர் தொடர்பாக வெளிவந்த வரலாற்று நூல்களும், கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புக்களும் 1070 இல் சோழரின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரின் அரசியல், பண்பாட்டு வரலாறு தனிப் போக்குடன் தமிழ்ப் பிரதேசங்களில் படிப்படியாக வலுப்பெற்று வந்ததை வெ-ளிப்படுத்துவதாக உள்ளன. இதற்கு உதாரணமாக சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட சில சம்பவங்களை இவ்வி டத்தில் குறிப்பிடலாம்.

சோழரை வெற்றி கொண்ட முதலாம் விஜயபாகு தனது அரசையும், பௌத்தமதத்தையும் பாதுகாக்க சோழர்காலப் படைவீரர்களிலேயே தங் கியிருந்தான். ஆயினும் அவன் சோழ நாட்டின் மீது படையெடுக்குமாறு அப்படைவீரர்களை வேண்டிய போது அதை ஏற்க மறுத்த தமிழ்ப்
படைவீரர்கள் பொலநறுவை அரசின் மீது படையெடுத்து அவ்வரசை வெற்றி கொண்டனர். சூளவம்சம் இப்படைவீரர்கள் வடஇலங்கையில் உள்ள மகாதீர்த்த, மட்டிகாவட்டதீர்த்த ஆகிய இடங்களில் தங்கியி-ருந்தே இப்படையெடுப்புகளை மேற்கொண்டதாகக் கூறுகின்றது. அவற்றுள் மகா தீர்த்த என்ற இடம் மாதோட்டதுறைமுகத்தைக் குறிக்கின்றது. மட்டி காவட்டதீர்த்த என்ற இடம் பாளி இலக்கியத்தில் முதன் முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விடம் மாதோட்டத்திற்கு வடக்கே பூநகரிப்பி ராந்தியத்தில் உள்ள மட்டுவில்நாடு என்ற இடமாக இருக்கலாம். இரண் டாம் இராதிராச சோழனது பல்லவராயன்பேட்டை மற்றும் திருவாலங்காடு சோழக் கல்வெட்டுகள் வடஇலங்கையில் மாதோட்டம், புலச்சேரி முதலான இடங்களுடன் மட்டிவால் என்ற இடத்தையும் சோழப் படைகள் வெற்றி கொண்டதாகக் கூறுகின்றது.கல்வெட்டில் கூறப்படும் மட்டிவால் தற்போது பேச்சு வழக்கில் உள்ள மட்டுவில் நாடாக இருக்கலாம். இவ்விடத்திலும் போத்துக்கேயர்காலக் கோட்டை கட்டப்பட்டதற்கு இவ்விடம் துறைமுக நகராக இருந்ததே முக்கிய காரணமாகும்.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் ஹோமாறன்கடவல (குமரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவை) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து 1215 இல் பொலநறுவையை வெற்றி கொண்டு ஆட்சிபுரிந்த கலிங்கமாகன் வட-கலிங்கத்தில் இருந்தோ அல்லது மலேசியாவில் இருந்தோ படையெடுக்க வில்லை, மாறாக அவன் ஹோமாறன்கடவலவில் இருந்த சோழப்பிரதிநிதியால் அல்லது சோழப்படைத்தளபதியால் ஆட்சிக்கு அமர்த்தப்பட்டவன் என்ற புதியசெய்தி தெரியவந்துள்ளது. மேலும் 1070 இல் பொலநறுவையில் சோழர் ஆட்சி வீழ்ச்சியடைந்தாலும் அவர்களின் ஆதிக்கமும், நிர்வாக ஒழுங்கும் தமிழர் பிரதேசத்தில் ஐரோப்பியர் காலம்வரை தொடர்ந்தமையும் இக்கல்வெட்டால் அறியப்படும் புதிய சான்றாகும்.

பொலநறுவை வீழ்ச்சியைத் தொடர்ந்து கலிங்கமாகன் அரசு வட இலங்கையில் இருந்ததற்குப் பாளி சிங்கள இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வரசின் தலைநகர் எது என்பதை இவ் விலக் கியங்கள் கூறாவிட்டாலும் அவனது படைநிலைகள், ஆதிக்கம் நில விய இடங்களாக புலத்திநகர (பொலநறுவை), கொட்டசார (திருகோணமலை கொட்டியாரம்) ஹந்கதலக (கந்தளாய்), காகலய, பதிமாவட்டம் (பதவியா), குருந்தி (குருந்தலூர், குருந்தலூர்மலை) மானாமத் (இவ்விடம் ஹோமாறன்கடவல கல்வெட்டில் கூறப்படும் மாநாமத்(து) நாடாக இருக்கலாம்), மகாதித்த (மாதோட்டம்), மன்னார (மன்னார்), புலச்சேரி, கோணா மாவட்டம் (கோணாவில்), மதுபதித்த (இலுப்பைக்கடவை), சூறதித்த (ஊர்காவற்துறை), வலிகாம (இவ்விடம் மன்னார் அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் என்ற இடமாக இருக்கலாம்). இவ்விடங்களிலேயே கலிங்கமாகனுக்கு பின்னர் ஆட்சி புரிந்த சாவகன் காலத்திலும் அவன் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததை பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்விடங்களில் பெரும்பாலனவை திருகோணமலை உள்ளிட்ட வட பகுதியில் காணப்படுகின்றன. அவ்விடங்களில் சாகவன் ஆட்சி நில வியதை தமிழக புதுக்கோட்டை குடுமியாமலையில் உள்ள 1262 ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது. கலிங்கமாகனுக்குப் பின்னர் இலங்கைமீது இரண்டாவது தடவையாகப் படையெடுத்த சாவகன் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய, சோழப்படைகளுடன் மாதோட்டத்தில் வந்திறங்கி பதி (பதவியா), குருந்தி (குருந்தலூர்) ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த மக்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு தம்பதேனிய அரசு மீது படையெடுத்தான் எனச் சூளவம்சம் கூறுகின்றது பேராசிரியர் இந்திரபாலா இவன் சுதந்திர மன்னனாக இருந்தே இப்படையெடுப்பை மேற்கொண்டான் எனக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகள் கோடலிபறிச்சான் காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய சிறு அறிமுகமாகும். இக்கல்வெட்டு இலங்கைத் தமிழரின் அதிலும் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழரின் இருப்பு, இடைக்கால அரசியயல் வரலாறு, தமிழ் அரச உருவாக்கம், பண்பாடு மற்றும் இடப் பெயர் பற்றி ஆய்வில் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. ஆகவே இக்கல்வெட்டை ஆராய்வதற்கு பலதுறை சார்ந்த புலமையாளரின் பங்களிப்பு மிக அவசியமாகும். இவற்றைக் கருத்தில் கொண்டே இக்கல்வெட்டின் நான்காவது பக்கத்தில் தெளிவற்றுக் காணப்படும் சில வரிகளை மீண்டும் படியெடுத்ததன் பின்னர் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சுப்பராயலு, பேராசிரியர் இரகுபதி மற்றும் கலாநிதி இராஜ

**– பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம்–**
**வரலாற்று தொல்லியல்த்துறை,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**

தினந்தினம் பறந்து இந்தத் திக்கெலாம் உலவி வந்து,
இனித்திடும் தேனைச் சேர்க்கும். இனிய "தே னீக்கள்" பாரீர்!
கணத்திலே அதனை மாந்தர் கண்டுமே சிதைத்த போதும்,
மனத்துயர் இன்றி மீண்டும் மகிழ்வுடன் கூட்டைக் கட்டும்!

மனிதனோ தோற்ற போது மனதினில் சோகம் மேவ
இனியிந்தப் புவியின் வாழ்வு ஏனென்று கேள்வி கேட்டுக்
தனிமையில் வாடு கின்றான் தற்கொலை செய்து கொள்ள
முனைகிறான்! வெட்கக் கேடு, மூவிரு அறிவு பெற்றோன்!

தரித்திரம் எந்து நாளும் தரித்திரா என்றே நம்பு !
சிரித்திட வைக்கும் செல்வம் சிதைவுறும் விட்டே செல்லும்!
மரித்திடும் வகையில் நல்ல மனிதனாய் வாழ எண்ணு!
புரிந்திடு நிலையில் லாத புவியைநீ வெற்றி கொள்ளு!

தோல்வியைப் படிக்கட்டாக்கி தொடர் முன் னேற்றம் காண,
வாழ்விலே எண்ணம் கொண்டால் வாட்டமேன்? வசந்தம் கூடும்.
தாழ்வுகள் உயர்சி யாவும் தாரணி மாந்தர் தம்மின்–
வாழ்வினில் வந்தே தீரும் வறுமையில் செம்மை காண்க!

**–அம். கௌரிதாசன்–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி தீ...

-கௌ. மோகனா-
ஆலங்கேணி

எட்டய புரத்துத் தீயே
தமிழதன் மூச்சு உமதே
தொட்டிடும் புகழ் உம் வானை
தோன்றினீர் உலகின் ஒளியாய்

கடிமணம் வீசும் தமிழை
உலகிற்கு எடுத்துரைக்க
விடியலை தோற்றுதற்காய்
பெரும்பணி ஆற்றினீரே

விதைத்தீரே விடுதலைத் தீயை
விரும்பினீர் சுதந்திரத்தை
வதைக்கின்ற கொடுமைத்
தீயிக்கு புயலென
எழுந்து நின்றீர்

பாட்டாலே செய்தீர் புரட்சி
உம் பெயர் நிலைக்கச் செய்தீர்
ஏட்டிலே எழுதி வைத்தீர்
உலகிலே தமிழ் விதைத்தீர்
பாமரர் புரியும் வண்ணம்
பாட்டினை மகிழத் தந்தீர்
அமுதமாம் குழந்தைப் பாடல்
அள்ளியே தந்தீர் உண்மை

கண்ணம்மா என்னும் அந்த
புதுமை பெண் அவளுக்காக
வண்ணமாம் தமிழில் அழகாய்
வடித்தீரே பெருமை சொன்னீர்
எதிர்ப்புக்கள் வந்தபோதும்
எதற்குமே தலைசாய்க்காது
மதமது பிடித்த கரி போல்
தமிழதே மூச்சு என்றீர்

முண்டாசு கவிஞர் நீரே
முறுக்கிய மீசை யோடு
அண்டத்தில் தமிழ் வளர்க்க
நெஞ்சத்தில் துணிவு கொண்டீர்

பாரதி தீ யாய் எழுந்தீர்
பைந்தமிழ் காத்து நின்றீர்
நேரிய தமிழணங்கை
வாழ்விலே வணங்கி நின்றீர்!.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழித்தெழு மகனே !

-திருமதி தமிழ்ச்செல்வி வசந்தகுமார்-
ஆசிரியை,
தி/மெதடிஸ்த் பெண்கள் கல்லூரி.

காத்திரமாய் காத்திருந்தோம் நாமும்
கண்மணிகள்
கண் விழித்து எழுவீரென
ஆத்திரமாய் போர் தொடுத்து
அழித்திடவே அரக்கர்கள்
முயன்றிட்டார் அன்று
சீர்பெற்ற வாழ்வுதனை
சிதைத்திடவே
சிந்தனை செய்த கயவரும்
பார் போற்ற வாழ்ந்திட்ட
நம் சமூகமதை போதையெனும்
படுகுழியில் வீழ்த்தியதே
கல்வியிலும் கலைகளிலும்
பண்பட்ட வாழ்வினிலும்
காதலிலும் வீரத்திலும்
இனிய இல்லறத்தினிலும்
பல்லாயிரம் ஆண்டுகள்
சிறப்புறவே கால் பதித்து
வாழ்ந்திட்ட சமூகம் நாம்
எல்லாம் இன்று மறைந்து
போனதுவே எத்தனை
துன்பத்திலும் வெற்றி கண்ட நாம்
இன்று பொல்லாத
போதைக்குள் சிக்கியே
பொன்னான வாழ்வுதனை
இழப்பதுவும் ஏனோ?
சாதிக்கப் பிறந்திட்ட சாதனை
வீரனே!
சரித்திரத்தில் உன்பெயர்
பதிப்பதை மறந்து
ஆதிக்க வெறியரின்
அநியாய சூட்சிக்கு ஆட்பட்டு
உழல்வதுவும் ஏனோ?
எழுந்து வா மகனே!
நாம் இழந்தது போதும்
எழுச்சியும் ஏற்றமும்
பெற்றிடலாம்
மழுங்கிடும் வாழ்வுதனை
மாற்றியே மாண்புடன்
வாழ்ந்திடலாம்
விழித்து எழு மகனே!
போதையை ஒழித்திடு!
வீரத்துடன் செயற்பட்டு
விடியலை நோக்கிடு!
செழிப்புற்ற வாழ்வுதனை
மீண்டும் மீட்டெடு!
செங்கதிரவனாய் சுடர் ஒளி
பரப்பிடு!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவுக்கொரு வீட்டு முற்றம்..



ஒவ்வொரு நாளும் வேகமாக சென்று கொண்டிருக்கிறது. காலையாவதும் மாலையாவதும் விளங்குவதேயில்லை. காலை எழுந்ததுதான் தாமதம். 'இன்னா பின்னேரமாயிட்டு' என எனது பொறுப்புகளை நினைத்து புலம்பிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தேன்.

எனதுமனைவி எனதுமகளுக்கு வீடுகட்டத் திட்டமிட்டபடி அதன் வேலைகளை இப்போதே தொடங்கிவிட்டாள். எனதுமனவை, மகளுடன் சேர்ந்து அதற்கான வீட்டு வடிவமைப்புகளை பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் நான் வீட்டினுள் நுழைவதைக்கண்ட மகள் என்னை ஆர்வமாகக் கூப்பிட்டு தன்னருகிலே அமரச்சொல்லி ஓரழகான மாடிவீட்டின் வடிவமைப்பைக் காட்டி "இந்த ஊடு எப்படிப்பா இருக்கு?" எனக் கேட்டாள். வேலையின் களைப்பால் வந்தநான், "சா அருமையா இருக்குப்புள்ள, நல்ல வடிவாவும்தான் புள்ள இருக்கு" என முகமலர்ந்து சொன்னேன். நான் கூறியதைக் கேட்ட எங்கடமகள் மகிழ்ச் சியில் துள்ளிக்குதித்தாள். சில நிமையங்களில் மீண்டும் என்னருகில் வந்தமர்ந்தாள். பழைய வீடொன்றின் அமைப்பை காட்டி 'இந்த ஊடு நல்ல அழகா இருக்கு என்னப்பா? நாம இப்படி ஊடல்லாம் கட்டினா செம்மயா இருக்கும் என்னா? ஆனா இதல் லாம் இப்ப நாம கட்டினா நம்மள பார்த்து ஊரே சிரிக்கிம் என்னப்பா" என்றாள்.

அந்தப் படத்தில் மகள் காட்டிய வீட்டைப் பார்த்ததும் எனக்குப்பழைய நினைவுகள் கண்முன்னே வந்து ஊசலாடத் தொடங்கியன. நான் கவலையில் இருப்பதை எனதுமுகம், வீட்டில் இருந்தவர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று பெரியோர் சும்மாவா சொன்னார்கள். அந்தவேளையில் எனதுமகள் என்னைத் தட்டி "என்ன வாப்பா ஏதுமே கதைக்காம இருக்கீங்க. எதப்பத்தி நீங்க யோசிக்கீங்க" என கேட்டாள். 'ஒண்டுமில்லமா, பழைய நினைவெல்லாம் வந்திச்சி, எங்கட பழைய ஊட்டு நினைவு வந்திச்சு அதான்' எனச்செ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சால்ல, உடனேயே 'அது என்னப்பா பழைய நினைவு. இப்ப ஏன் அந்த நினைவெல்லாம் உங்களுங்கு வந்திச்சு? எனக்கும் சொல்லுங்களேன்.' என கெஞ்சினாள் என் செல்லம். எனது மனைவியோ என்னை வம்பிழுக்க வேண்டி 'அதன்ன எனக்கு தெரியாத ஊடு' என நகழிப்பாய் கேட்டாள். நானும் புன்னகையுடன் கூறத் தொடங்கினேன்.

நான் சின்னப் புள்ளையா இருக்கேக்க கொழும்பில வேலை செஞ்சிற்று இருந்த எண்ட வாப்பாக்கு இடமாற்றம் ஊருக்கு வந்துது. அப்ப நாங்க ஊருக்கு வந்து ஓர் ஊட்டில வாடகைக்கு இருந்தோம். அந்த ஊட்டுக்கு முன்னுக்கு பழையகாலத்துப் பென்னம்பெரிய ஊடு ஒண்டு இருந்திச்சி. எனக்கு அந்த ஊட்டுக்குள்ள போயிப் பார்க்கணும் எண்டு கடும் ஆச. அப்படியோ கொஞ்ச நாளையால அந்த ஊட்டுப்பொடியன் நான்படிச்ச பள்ளியிலயே எண்ட வகுப்புலயும் சேந்தான். எனக்கு ஆண்டவன் தந்த வாய்ப்பு எண்டு எண்ணிக்கி அவன்கூடப் பழகத் தொடங்கினன். கொஞ்ச நாள்ள நாங்க நல்ல கூட்டாளிகள் ஆனம். அவன எங்கஊட்ட கூட்டிக்கி வந்தன். அவனும் அடுத்தநாள் அவண்ட ஊட்ட போகக்கூப்புட்டான். நானும் போனன். அவண்ட வீட்டுட முன் முற்றம் மட்டுமே அம்மாடியோவ் அவ்வளவு பெரிசா இருந்திச்சி. இவ்ளோ காலம் வேலிக்குள்ளால பார்த்துக்கு இருந்த எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருந்திச்சி. இவ்வளவு பெரிசா இருக்கி எண்டு. நான் இப்பிடிப்பட்ட பெரிய ஊடெல்லாம் யாழ்ப்பணத்துல தான் பாத்து இருக்கன். அந்த ஊடுகளை பத்திச் செல்ல வார்தைகளே இல்லம்மா.

ஊட்ற உட்பக்கம் சதுரமா முற்றமும் அதுட உள்ளுக்க ஒருமுற்றம் பெரிசாவும் அதுக்கு மேல சூரிய வெளிச்சம் படுற அளவுக்கு இடைவெளியும் அந்த முற்றத்தைச் சுற்றி திண்ணையும் அதச் சுற்றி அறைகளும் இருக்கும். அந்த ஊட்டுல எப்பிடியும் பத்து அறைகளெண்டாலும் இருந்திருக்கும். அப்படிச் சிலஊடுகள் மட்டுந்தான் மாடிஊடா நாங் பார்த்திருக்கன். அந்தக்காலத்தில அந்த ஊடுகள் 'நாச்சியார் வீடு' எண்டு சொல்லுவாங்களாம். அப்படிச் சொல்றதுக்கு நிறைய கரணியம் இருக்காம். அந்த ஊடுகள் வெறும் சுண்ணாம்பு கல்லுகளால் கட்டி சாயம் பூசின கட்டடம் இல்ல. அதுக்கு உசிர்கூட இருந்திருக்கும் எண்ட சொல்லுவாங்க. அவங்கட ஊட்டுக்க போகக்கொள்ள நம்மள அறியாமலே மகிழ்ச்சியா இருக்குங். நட்ட நடுவெயிலில கூட அந்த ஊட்டு முற்றமும் குளிரும். அந்த ஊட்ற தனித்துவமே அந்த முற்றம்தாங் எண்டுதான் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுவன்.. அந்த ஊட்டுல சாதுவா மழை தூறிச்செண்டாலே நிலம் கசியும். அந்த ஊட்ற நடுமுற்றத்தில எப்பயும் ஒருசால்வை இல்லாட்டி ஒருவேட்டி கட்டியிரிக்கிற கயித்துக் கொடியில காயுங். வளவுக்குள்ள ஆர் வந்தாலும் குரைக்காத நாயொண்டு அந்த முற்றத்தில வாயால வீணி வடிய வடியத் தூங்கித்துக் கிடக்கும். அங்க ஒரு சாய்மனை கதிரையும் கிடக்கும். அதப் பாக்கக்க அந்தக் காலத்து கதையில வாற ராசா படு-த்துக் கிடக்கிறமாரித்தான் எனக்குத் தோணுங். அந்த ஊட்ல இருந்தா தனியா இருக்கிற உணர்வே வராது தெரியுமா? அப்பிடி ஒரு மகிழ்ச்சியா இருக்குங், அங்க அனேகமா கூட்டுக்குடும்பங்தான் வாழும். அது மட்டு மில்லம்மா, இப்ப முற்றம் வைச்ச ஊடெல்லாம் சிதைஞ்சு போயிற்று.

அப்புடி முற்றம் வைச்ச ஊடுகள் பழைய பாரம்பரிய ஊடா இருந்திச்சு. எனக்கெண்டா அந்த ஊட்டு முற்றத்தில விளையாடின விளையாட்டு இப்ப கூட அப்படியே என்ர மனசில பதிஞ்சுபோய்க் கிடக்கு. கிளித்தட்டு, பல் லாங்குழி, கித்துப்புள், பச்சக்குதிரை, தத்தி, ஒலிச்சிக்கண்டு இப்படி நிறைய விளையாட்டெல்லாம் எங்கமாமாகூட விளையாடின நினைவு அப் படியே இருக்கி. இப்பல்லாம் கைப்பேசில பல விளையாட்டுகளு தப்பான ஆக்களோட பழக்கமும் ஏற்படுத்தி பல சிக்கல்களக் கொண்டுவாரிங்க, அதுமட்டுமில்லாம கண்ல சிக்கல், தலைவலி எண்டு நோயெல்லாம் கசனா வருகுது. ஆனா நாங்க நிறைய விளையாடுவம் அதுல ஒரு நோய்யும் இருக்காது. முழுசா ஆரோக்கியம் தான். இதுலையும் நாங்க விளையாடின நிறைய விளையாட்ட மறந்துட்டன். அப்படி அந்தமுற்றத்தில விளையாடின விளையாட்டுல நிறைய நல்லகூட்டாளிகளும் கிடைச்சியிருக்கி எங்களு-க்கு. அப்படிப்பட்ட முற்றம் அது. அதுக்குப்புறவு ஒருநாள் எண்டநண்பன் அவன்ர ஊட்ற மற்ற அறைகளையுங் சுத்திக் காட்டினான். அவண்ட ஊட்ற அழகை பார்க்க ஏலா. அப்பிடி இருக்குங். அந்த ஊட்டப் போலதாம்மா நீ காட்டின ஊடும் இருந்திச்சி. ‘அதான் இந்த ஊட்டுட அமைப்ப பார்க்க பழைய நினப்புகள் வந்திச்சி’ என்று எனது கதையை கவலையுடன் கூறி முடித்தேன். எனது கதையைக் கேட்டு விழிமூடாது உறைந்திருந்த எனது மகளும் மனைவியும் என் முகத்தை பார்த்தார்கள். எனது மகள் என்னிடம் ‘வாப்பா நாமகட்ற ஊட்டுக்கு முற்றம் வைப்பமா வாப்பா? அதோட சேர்-த்து நிலா முற்றமும் வைப்பமே’ என்று ஆசையாகக் கேட்டாள். நானும் சிரித்தபடி ஆடையினை மாற்ற எழுந்து சென்றேன்.

**–எஸ். பாத்திமா ஹிமா–**
**சம்மாந்துறை**

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்மையில் வெளியான
## நம்மட திருக்கோணமலைப் படைப்பாளிகளின்
# படைப்புகள்

பெயர் : பிரமி
ஆசிரியர் : பிரம்மியா சண்முகராஜா
நூல் வகை : கவிதை
பக்கம் : 108
விலை : உருபா. 720.00
தொடர்பு : புலனம் - 0762284411



பெயர் : எனது வாழ்க்கை நாடகம்
ஆசிரியர் : கேணிப்பித்தன் ச.அருளானந்தம்
நூல் வகை : வரலாறு
பக்கம் : 304
விலை : உருபா. 1500.00
தொடர்பு : புலனம் - 0772155023



பெயர் : உள்ளூர் ஆளுமைகள்
ஆசிரியர் : B. ஹாஜா முகைதீன்
நூல் வகை : வரலாறு
பக்கம் : 277
விலை : உருபா. 900.00
தொடர்பு : புலனம் - 0773797369



பெயர் : செரண்டிப்
ஆசிரியர் : கே.எம்.எம். இக்பால்
நூல் வகை : வரலாறு
பக்கம் : 156
விலை : உருபா. 700.00
தொடர்பு : புலனம் - 0775294942




பெயர் : இருடி
ஆசிரியர் : ஜே. பிரோஸ்கான்
நூல் வகை : கவிதை
பக்கம் : 80
விலை : உருபா. 385.00
தொடர்பு : புலனம் - 0786874646






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# RAY-BANS TRINCO

Ray-Bans Special Offer 10% discount to customers who bring this advertisment

ரேபன்ஸ் இன் விசேட சலுகை இந்த விளம்பரத்தை கொண்டு வரும் வாடிக்கையாளருக்கு 10% விலைக்கழிவு வழங்கப்படும்

**OUR SERVICE**

* Surgeon Consulting * OT Reference

Design : Mr Hari Graphics - 0752666662

026 22 22 116 415, Dockyard Road, Trinco.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருபா : 150.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed by : S.M. Amher - 0754355904